விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை (10.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மகிந்தவுக்கு தகைமை இல்லை

## முன்னாள் தலைமை நீதியரசர் தெரிவிப்பு



**(கொழும்பு)**
**இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று இலங்கையின் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசியலமைப்பு சட்ட விதிகளின்படி, மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை யற்றவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியலமைப்பின் 31/2 வது பிரிவுக்கு அமையவே 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக்காலத்துக்காக அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருந் தார். இதனால் அவர் மூன்றாவது

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணைக்குழு சிறப்பாகச் செயற்படும்

(கொழும்பு)
இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது நோக்கமல்ல, இலங்கை அரசாங் கமும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டது. நாம் நீண்ட கால ஸ்திரத தன்மைக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறே கூறுகின்றோம் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ் வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து தெரிவித் துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் விசாரணை செயற் பாடுகளுடன் இலங்கை அரசாங்கம ஒத்துழைக்கும் என்று நாங்கள் தொடர்ச்சியாக நம்புகின்றோம்.

எனினும் அவர்கள் ஒத்துழைக்

24ஆம் பக்கம் பார்க்க....




தமிழகம் நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நாம் தமிழர் கட்சியினர் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் போராட்டம் நடத்தினர். இலங்கையில் நடக்கவிருக்கும் இராணுவ கருத்தரங்கில் இந்திய அரசு கலந்துகொள்ளக் கூடாது; பலஸ்தீனத்தில் நடைபெறும் போரை உடனடியாக நிறுத்து; தமிழக முதல்வரை இழிவுபடுத்திய இலங்கை அரசை ஒதுக்கிவை என்று முழுக்கமிட்டவாறு போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளியிப்படுத்தினர்

## வெடிபொருட்கள் பொலிஸாரால் மீட்பு

(வவுனியா)
வவுனியா, தாண்டிக்குளம் ஏ9 வீதியில் குடி தண்ணீர் விநியோகக் குழாய்களை பொருத்துவதற்கு குழி வெட்டிய போது அதில் இருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இந் தப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் இச்சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.


இந்த நிலையில்தாம் அங்கு சென்று வெடி பொருட்களை மீட்டனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித் தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் வவுனியா, தாண்டிகுளம் ஏ9 வீதி யில் உள்ள பிரமண்டு வித்தியால யத்திற்கு அருகில் நீர்க் குழாய்களைப் பொருத்ததுவதற்காக நேற்றுச் சனிக்கிழமை நிலத்தை தோண்டியு

23ஆம் பக்கம் பார்க்க....

# தாக்கப்பட்ட மாணவன் ரி.ஐ.டியினரால் கைது

## முன்னர் கைதான மாணவனுக்கு பிணை



(கொழும்பு)
சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் விடுதியின் கழிப்பறை யில் கடந்த ஞாயிறன்று அதிகாலை அடையாளம் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டு, இரத்தினபுரி வைத்தி சாலையில் சிகிச்சை பெற்று வந்த

23ஆம் பக்கம் பார்க்க....

# முக்கிய போர்க்குற்ற சாட்சியங்களை கூட்டமைப்பின் ஊடாக வழங்கலாம்

## அவலங்களை கூறுங்கள் என சுமந்திரன் அழைப்பு



(கொழும்பு)
இலங்கை அரசாங்கத்திற்கு எதி ராக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணை யகத்தினால், கடந்த மார்ச் மாதம் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்ப டையில் சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விசாரணைக்குழு விற்கு சாட்சியம் வழங்க விரும்பும் மக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணை யகத்தின் விசாரணைகள் தொடர்பாக அண்மையில் ஐ.நா மனிதவுரிமை கள் ஆணையாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் நேற்றைய தினம் யாழ். ஊடக அமை யத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்

23ஆம் பக்கம் பார்க்க....



SISIL WORLD
உங்களுக்கு பிடித்தவர்களுடன் உரையாடுவதற்கு
SAMSUNG, HUAWEI, INTEX
தொலைபேசிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!

- கடன் அட்டைகளுக்கு வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- வருட உத்திரவாதம்
- விசேட பரிசுப்பொருட்கள்



இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(சி-8156)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீடு விற்பனைக்கு

கச்சாய் அல்லாரை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட மூன்று அறைகள், சாப்பாட்டு அறை, குளியல் அறை வீடு விற்பனைக்கு உண்டு. (7257)

தொடர்புகளுக்கு - 0773557237


## உதவித் திட்டமும் அதிர்ஷ்ட லாபச்சீட்டு பரிசில் வழங்கலும்



(யாழ்ப்பாணம்) மக்கள் நலன் பேணும் அமைப்பினரின் ஏற்பாட்டில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சி.சி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி அமைப்பினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப் பொருட்களும் இதன்போது வழங்கப்படவுள்ளது என அமைப்பின் செயலாளர் செ.தனுஜன் தெரிவித்துள்ளார்.(செ)


## வீடு வாடகைக்கு

இல.153, பலாலி வீதி கந்தர்மடத்தில் அலுவலக அல்லது நிறுவனங்களுக்கு உகந்த வாகன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும் (7264)

தொடர்பு கொள்ள வேண்டிய தொ.இல. 0777558340

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 321 0815 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வங்கிச் சேவையில் 37 வருடங்களை நிறைவு செய்து ஓய்வு பெறும்

திரு.இளையதம்பி இரவீந்திரன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அறுபதாம் அகவை கண்டு
வங்கிச் சேவையில் நிறைவு கண்டு
சேமமாய் வாழ்வு கண்ட
வங்கியாளா உங்கள் வாழ்வதனில்
இன்னுமோர் ஆண்டு
இனிதாய் மலர்ந்திருக்கு
புதிதாய் பெரிதாய்
நிறைவாய் உயர்வாய்
வாழ வாழ்த்துகின்றோம்.

சிரேஷ்ட முகாமையாளர், ஊழியர்கள்
மேற்தரக்கிளை,
இலங்கை வங்கி, சுன்னாகம். (7263)

## உடனடியான நிரந்தர வேலைவாய்ப்பு

18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் (கல்வி/அனுபவம்/சிங்களம் அவசியமில்லை) உடனடியாக தொடர்பு கொண்டால் உடன் வேலைவாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/பிஸ்கட்/சொலட்/டொபி/யோகட்/ கிளவுஸ்/ஆடை/Tip Tip/பால்மா/தேயிலை/இறைச்சி போன்றவற்றுக்கு ■உற்பத்தி■ லேபல்■பொதியிடல்■களஞ்சிய பிரிவு ஆட்கள் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) சம்பளம் 18000/-, 25000/-, 32000/- வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு (C-8155)

தொடர்பு: 0775561883

## நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்கள் வயதிற்கேற்றவாறு நிரந்தர தொழில் மற்றும் தொழிலுக்கேற்ற சம்பளம் 18000/-, 25000/-, 32000/-. 18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பால்மா/டொபி/கோடியல்/பிஸ்கட்/Tip Tip/காமெண்ட்/கிளவுஸ்/ஜேம் போன்ற தொழிற்சாலைகளில்■உற்பத்தி■ லேபல் ■களஞ்சிய பிரிவுகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.(நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம். (C8154)

தொடர்பு: 0776838231

## லட்சுமி மறைந்து ஆண்டு ஒன்று!



பிறப்பு 04.08.1947

இறப்பு 22.07.2013

திதி: பூரணை

அமரர்

### விஜயலக்ஷ்மி சோதிலிங்கம்

சோதியை ஏற்ற சுடர் பிரிந்து ஆண்டொன்று!
சோதியை வரித்த சுடர் மறைந்து ஆண்டொன்று!!
சோதியை அணைத்த லட்சுமி பிரிந்து ஆண்டொன்று!
சோதியை இணைத்த லட்சுமி மறைந்து ஆண்டொன்று!!
ஆண்டு ஒன்றல்ல; ஆண்டு ஓராயிரம் கடந்தாலும்
சோதி சுடரினை மறந்திடல் இயலுமா?
சோதிலட்சுமியை மறந்திடல் முடியுமா?

75, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

சோதிலிங்கம் குடும்பத்தினர்
& உமாரஞ்சினி கஜேந்திரன்.
(மைத்துனி)

# 14ஆம் ஆண்டு நினைவலைகள்

“நீத்தல்,
வாழ்வின்
முடிவு அல்ல;
புதியதொரு
புனித வாழ்வின்
தொடக்கம்.”



அமரர்

### திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. -குடும்பத்தினர்- (C-8151)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

08.08.2014 முதல் 13.08.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (C-8148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிபுணர்கள் நியமனமானது விசாரணையை நியாயமாக்கும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



அரசாங்கத்திடம் நிலையான வெளிநாட்டுக் கொள்கை கிடையாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கொள்கைகள் மாற்றமடைவதால் அனைத்தும் குழப்பகரமானதாகவே உள்ளன என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வெளிநாட்டு நிபுணர்களின் நியமனம் சர்வதேச விசாரணையை நியாயப்படுத்துவதாக அமைந்துவிட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொழில் நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி தொடர்பான அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவிக்கையில்,

**தூதுவர்கள்**

இலங்கையிலுள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்களின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் இங்குள்ள அரச எதிர்ப்பாளர்களை இணைத்துக்கொண்டு எமது நாட்டை பல வழிகளிலும் சுற்றி வளைத்து நெருக்கடிகளில் தள்ளிவிட்டு அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்தி அனைத்து முயற்சிகளையும் மேற்கொணடு வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு தனித் தமிழீழத்தை இலங்கையில் ஏற்படுத்த முயற்சி செய்து தோல்வி கண்டவர்களும் புலி ஆதரவாளர்களும் புலம்பெயர் தமிழர்களும் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர். இவர்களது ஒரே நோக்கம் இலங்கையை பழிவாங்குவதே தவிர வேறு எந்த நோக்கமும் கிடையாது.

**தளம்பல்**

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசாங்கத்திடம் நிலையான வெளிநாட்டுக் கொள்கை இல்லாது காணப்படுவது பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கொள்கைகளை அரசாங்கம் மாற்றிக் கொள்வதால் தளம்பல் நிலை தோன்றி, வெளிநாட்டலுவல்களிலும் மக்கள் மத்தியிலும் குழப்பகரமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

**வெளிவிவகாரம்**

வெளிவிவகார அமைச்சிலும் குறைபாடுகள் உள்ளன. அங்கு பணிபுரியும் அதிகாரிகளின் சிந்தனைகளிலும் மாற்றங்கள் தேவை. இதுவும் எமது வெளிநாட்டு விடயங்களில் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றன.

**நிபுணர்கள்**

சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது. அவ்வாறான விசாரணையை எதிர்த்து பாராளுமன்றத்தில் அரசு பிரேரணையொன்றையும் நிறைவேற்றியது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு அரசாங்கம் வெளிநாட்டு நிபுணர்களை ஆலோசனை வழங்குவதற்கென கூறி நியமித்துள்ளது. இது சர்வதேச விசாரணையை அரசாங்கம் நியாயப்படுத்துவதாகவும், ஏற்றுக்கொள்வதாகவும் அமைந்துள்ளது. கடந்த காலங்களில் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தது. இறுதியில் அக்குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு பாதகமாக அமைந்தது என அவர் மேலும தெரிவித்தார். (6)

## தங்கத்துடன் இருவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்திய ஐவர் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் கடற்பகுதியில் வைத்து கைது செய்யபபட்டுள்ளனர்.

மண்டபம் மறேன் பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மண்டபம் மறேன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகினறமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

## தங்கம் கடத்திய இருவர் கைது

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்த முயன்ற இருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் 34 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தினை தங்களது பாதணிகளில் மறைத்து வைத்து கொண்டு செல்ல முயன்றதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 34 இலட்சம் ரூபாவாகும்.

சந்தேக நபர்கள் இருவரும் 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (6)

## சார்க் நாடுகள் பங்கேற்கும் 18 ஆவது மாநாடு நேபாளத்தில்

சார்க் நாடுகள் பங்கேற்கும் 18ஆவது மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி நேபாளத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் உதவிச் செய்தித் தொடர்பாளர் பாரத் ராஜ் ரெக்மி கூறுகையில், "சார்க் நாடுகள் பங்கேற்கும் 18ஆவது மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஆரம்பித்து இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளது.


இது தொடர்பாக சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்த பல்வேறு உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பாரத் ராஜ் ரெக்மி குறிப்பிட்டுளார்.

சார்க் அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான் உள்ளிட்ட 8 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

கடந்த 2002ஆம் ஆண்டும் சார்க் மாநாடு நேபாளத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஊர் அறியப் பேர் அறிய!



### சேந்தாங்குளம்

திசை தெரியாது அலைக்கழிந்த மாலுமி ஒருவன் ஒரு மாதிரி கரையை வந்தடைந்தான். அவன் வந்து சேர்ந்த இடம் ஒரு குள வடிவில் கற்களற்ற தெளிந்த நீருடன் வட்டவடிவில் கடலுடன் சேர்ந்திருந்தது. ஒரு மாலுமி இந்தக் குளத்தை சேர்ந்தான் என்பதற்காக சேர்ந்தான் குளம் என்ற நாமம் சூட்டினர். இது காலப்போக்கில் மருவ "சேந்தாங்குளம் என்று உருப்பெற்றது. யாழ்.நகரில் இருந்து 16 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்த சேந்தாங்குளம் தெல்லிப்பழைப் பிரதேசச் செயலகத்தின் கீழ் J/222 கிராம அலுவலர் பிரிவினுள் உள்ளடங்குகிறது. இங்கு 103 குடும்பங்களைச் சேர்ந்த 452 அங்கத்தவர்கள் உள்ளார்கள்.

### சத்தியக்காடு



இவ்வூரில் காளிதேவி கோவில் ஒன்று உண்டு. காளிதேவியை நினைந்து நீதி விசாரணையின் போது சத்தியம் செய்வதற்கு என ஒதுக்கப்பட்ட இடம் தான் சத்தியக் காடு. ஆரம்பத்தில் சத்தியம்காடு என்று அழைக்கப்பட்டு பின்னர் சத்தியக்காடு என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

புதுக்கையூர் ஜெயம் ஜெகன்

## இன்றைய இராசி பலன்

**10.08.2014**

**(ஆடி 25, ஞாயிற்றுக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**

**பூரணை பின்னிரவு 12.52 மணி வரை**

**திருவோணம் பின்னிரவு 12.23 மணிவரை**

**இராகுகாலம் 4.34- 6.04 மணிவரை**

**சுபநேரம் 9.04-10-34 மணிவரை**

**பூரணை விரதம்**

வளவன்

**மேடம்** — புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த சொல் யுத்தங்கள் சுமுகமாக முடியும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** — உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்** — நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, கௌரவமான நாள்.

**சிம்மம்** — தன்னம்பிக்கையோடு பணி புரிவீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி** — நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**துலாம்** — மனச் சஞ்சலங்கள் கூடும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பயணங்கள் கைகூடும், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு வழி கோலுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, அந்நியர் சந்திப்புண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** — நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்** — உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைத் கொடுக்கலாம்.

**கும்பம்** — உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவுடையும் நாள், சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள்.

**மீனம்** — அதிர்ஷ்டகரமான நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட சிறகுவலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் மீனவர்கள்

தடை செய்யப்பட்ட சிறகுவலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து மீனவர்களும் தப்பித்து சென்றுள்ளனர்.


இருப்பினும் அவர்கள் பயன்படுத்திய 4 இலட்சம் ரூபா பெறுமதியான வலை உபகரணங்களை மீட்டதாகப் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்துறைப் பிரதிப்பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

"கற்கோவளம் முதல் முல்லைத்தீவு வரையிலான கடற்பகுதி கரைவலைத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட இடமாகவிருப்பதினால், சிறகுவலைகள் (கலங்கட்டி) பயன்படுத்தி மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி, வடமராட்சி தாளையடிப் பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் ஐந்து மீனவர்கள் கலங்கட்டி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.


வழமையாக கலங்கட்டி மீன்பிடிப்பதற்கு பூவரசம் தடி பயன்படுத்தப்படும் நிலையில் இவர்கள் கம்பிகளை உபயோகித்துக் கலங்களைக் கட்டியுள்ளனர்.

இதனால், கரை வலை மீன்பிடியில் ஈடுபடும், மீனவர் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, இது தொடர்பில எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்குச் சென்று கடற்றொழில் உபகரணங்களைக் கைப்பற்றியதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)




# அகில இலங்கை மொழித்திறன் போட்டி-2014

## பாவோதல்




யாழ்ப்பாணக்கல்லூரிமாணவன் லோகேஸ்வரன் ஸ்ரீகீரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பாவோதல் போட்டியில் கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று கொழும்பு மத்திய இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழித் திறன் போட்டி பிரிவு 2 இல் (தரம் 7) பாவோதல் நிகழ்ச்சியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

## பேச்சுப் போட்டி




யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி தர்ஷனா சரத்சந்தர் பேச்சுப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய இடங்களில் (தரம் 7 பிரிவு-2) முதலாம் இடத்தைப் பெற்று கொழும்புமத்திய இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழி திறன் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

## இலக்கணப் போட்டி




யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி இமாஜினி செல்வராசா இலக்கணப் போட்டி பிரிவு-5 (A/L) யாழ்ப்பாணத்தில் கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய இடங்களில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

# நல்லைக்குமரன் மலர் வெளியீடும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும்

யாழ்.மாநகராட்சி மன்றின் சைவ. சமய விவகாரக் குழுவின் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா 2014 (22) நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும், மாநகர ஆணையாளருமான செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்மாநகர சபையின் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தரும் சைவசமய விவகாரக் குழுவின் முன்னாள் செயலாளருமான இ.இரத்தின சிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை சைவ சமய விவகாரக்குழுவின் செயலாளர் பு.ஆறுமுகதாஸனும் ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சைதன்யா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் மலர் வெளியீட்டுரையினை பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளதோடு ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ்.விருதும் பொற்கிழியும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றிய தலைவரும், சித்தன்கேணி சிவன் கோவிலின் பிரதம குருவுமான வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களுக்கு வழங்கப்படவுள்ளது. (6)




# சுன்னாகத்தின் குடிநீர் விநியோகம்; கழிவு ஒயில் நீரில் கலந்ததால் அவலம்

யாழ்சுன்னாகம் மின்சார நிலைய கழிவு ஒயில் சுற்றாடலில் கலந்ததன் காரணமாக அங்குள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் பாதிப்படைந்துள்ளன. இதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் குடிதண்ணீர்த். தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உடுவில் பிரதேச சபையினால் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் பிரச்சினை சம்பந்தமாக சுன்னாகம் சனசமூக நிலையத்தினர், பிரதேச சபையிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில்பிரதேச சபையின்தலைவர, உறுப்பினர்களும் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் கடுமையாக ஒயில் கலந்துள்ள கிணறுகள் உள்ள பகுதிகளில் பத்தாயிரம் லீற்றர் கொள்ளளவு உள்ள ஐந்து நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இதற்கமைய இந்த குடிதண்ணீர் விநியோகத்தை பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் ஆரம்பித்துவைத்துள்ளார்.

இந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர்த தேவையை கருத்தில் கொண்டு மேலதிகமாக நீர்த்தாங்கிகள் வழங்கும்படி யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் பிரதேச சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அது கிடைக்கும் பட்சத்தில் மேலும் சில இடங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபையின் தலைவர் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது வைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்களில் தினமும் காலையும், மாலையும் குடிதண்ணீர் நிரப்பப்படும் என மேலும் தெரிவித்துளார். (6-4-23)

## யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும்யோகாபயிற்சிப்பட்டறைக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பலாலி வீதியிலுள்ள இந்து சமயப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இதில் மூத்த யோகா ஆசான் வி.என்.சிவநேஸ்வரராஜா ஆரோக்கியத்திற்கான யோக நுட்பங்கள் எனும் தொனிப்பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்.

15 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள மேற்படி பயிற்சியானது இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.

இதற்கமைய பிரிவு I காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும் பிரிவு II 7 மணி தொடக்கம் 8 மணிவரையும்இடம்பெறவுள்ளது.(6)

## ஹாட்லிக் கல்லூரிக்கு முதலாம் இடம் இரண்டு

(தும்பளை)

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் தேசிய மட்ட போட்டி ஹற்றன் ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

இப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி குழு இசைப் பிரிவு I முதலாம் இடத்தையும் தனி இசை பிரிவு IV முதலாம் இடத்தையும், குழு இசைப் பிரிவு II இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. (6-19)

# இளைஞர் கரங்களால் கிராமத்திற்கு ஒரு வீடு

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினரால் இளைஞர் கரங்களால் கிராமத்திற்கொரு வீடு என்னும் செயற்றிட்டத்தின் கீழ் வீடு அமைக்கப்படவுள்ளது.

வீட்டிற்கான அத்திவாரம் இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்களின் உதவியுடன் வெடடப்பட்டு வருகின்றது.

இவ் வீட்டினை அமைப்பதற்கு செலவாகும் தொகையில் ஒரு பகுதியே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் வழங்கப்படும் நிலையில் மேலதிக செலவுகளை குறைக்கும் முகமாக இளைஞர்கள் ஒன்றிணைந்து அத்திவாரம் வெட்டியுள்ளனர்.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.செந்தில்குமரன், உபதலைவர் ரொபின்சன், பொருளாளர் அ.ஜெபநேசன், ஊடகச் செயலாளர் டி.கூரே, சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத் தலைவர் அ.சனோசன், பெரியவிளான் இளைஞர் கழக அமைப்பாளர் கிறிஷ்டியன் உள்ளிட்ட இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (6-23)

# பொலிஸார் முறைகேட்டில் ஈடுபட்டால் உடனடியாக என்னிடம் முறையிடுங்கள்

## அத்தியட்சகர் தெரிவிப்பு

தமிழ்ப் பொலிஸார் உட்பட பொலிஸார் முறையற்ற விதத்தில் செயற்பட்டால் தன்னிடம் முறையிடுமாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பபிள்யூ.பி.விமலசேன தெரிவித்தார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து பொலிஸாரே முறையற்ற விதத்தில் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதோடு அவர்களுக்கெதிராகவே முறைப்பாடுகளும் வருகின்றன.

இலஞ்சம், தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்றவாறு வீதியொழுங்குகளை மாற்றுதல் போன்றவற்றில் பொலிஸார் ஈடுபட்டால் அது தொடர்பில் என்னிடம் நேரடியாக முறையிட முடியும்.

சொந்த பிரச்சினை காரணமாக தமக்கு தெரிந்த பொலிஸாரை வைத்து மிரட்டுவது போன்றவை சட்டவிரோத செயற்பாடுகளாகும்.

ஆகவே இது தொடர்பில் உரிய முறைப்பாடு எனக்கு கிடைக்குமிடத்து முறையிடுபவருக்கு பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கையெடுக்க முடியுமென்றார் விமலசேன. (6-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குமிடம் வழங்கப்படும்
# தேவை
கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாயின்
மேசன் 1200/=
செடலின்பாஸ் 1600/=
கம்பிபாஸ்
பெயின்டர்
டயில்பாஸ்
கையுதவியாளர் 900/= 1100/=
மேலதிக விபரங்களுக்கு
0775561883
c-8153


# பெரகராவில் யானை குழப்பம் 12 பேருக்கு காயம்

கண்டியில் நடைபெற்று வரும்ரந்தோலி பெரகராவின் இரணடாவது நாள் பெரகரா ஊர்வலத்தின் போது யானை ஒன்று திடீர் என குழப்பம் விளைவித்ததில் யானைப் பாகன் உட்பட 12 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகிகண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முனதினம் இரவு இடம பெற்றுள்ளது.

பெரகரா ஊர் வலம் வீதி வழியாக சென்று மீண்டும் தலதா மாளிகைக்கு செல்லும் வழியில் இராஜ வீதி தேவ வீதி சந்தியில் வைத்தேயாணைஒன்று திடீர் என குழப்பம் விளைவித்துள்ளது.

இதனால் யானை பாகன், நடனகாரர்கள், கர்ப்பிணிபெண்ஒருவர, பொலிஸ் கான்ஸ்டபிள ஒருவர் உட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து பேராதனை மிருக வைத்தியசாலை வைத்தியர் அழைக்கப்பட்டு யானைக்கு மருந்தேற்றப்பட்டதையடுத்து நிலைமை சுமுகத்திற்கு கொண்டு வரப் பட்டது. (6)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



# உங்களுக்கு அவசரபணத்தேவை உள்ளதா?

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666

(சி-8149)

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 116 செவ் 1 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/3492 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 32 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/2442 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 79 ½<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில: Dip. in Science Teacher / ஆசிரியர்<br>தொ.இ: B/3493 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 13<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BA, HNDM<br>தொ.இ: G/2445 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 64 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம்<br>தொ.இ: B/3495 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 8 ½ செவ் 2 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில் O/L/தனியார் வேலை<br>தொ.இ: G/2450 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (UK - PR)<br>தொ.இ: B/3496 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 50 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: B.A (HONS) / UK (Student Visa)<br>எதிர்பார்ப்பு: UK - PR மட்டும்<br>தொ.இ: G/2451 |


# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

❖நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சரும வியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி, சொறி, சிரங்கு, தொடை இடுக் குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

❖இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள், மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

❖எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளை படுதல், மாதவி டாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப்வகைகளைமிகக்குறைந்தவிலையில்பெற்றுக்கொள்ளலாம்.

❖மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீலி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## எதிர்காலத்தில் “பைபாஸ்” செய்வதை தற்போதே தவிருங்கள்!!!

❖இருதய நோய்கள் (பைபாஸ் செய்யாது குணமாவதற்கும்), உயர் இரத்த அழுத்தத்தைத் தடுத்து இரத்தத்திலுள்ள கொழுப்பைக் கரைத்து இரத்த நாளங்களை சுத்தப்படுத்துவதற்கும், புற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கும், சிறுநீர்ப்பையில் கல் போன்ற பலவகை நோய்களைக் குண மாக்குவதற்கும் உரிய மருந்து எம்மிடம் உண்டு (இம் மருந்து அமெரிக்கா உணவு மற்றும் ஔஷத அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது)

நீங்கள் நாடவேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி:- 021 222 2567

(சி-8144)



## வேலையாட்கள் தேவை

K.R.S

உணவு உற்பத்தி நிலையத்திற்கு
பெண் வேலையாட்கள் தேவை
K.K.S ரோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
(உபதபாற்கந்தோர் அருகில்)
Tel :- 021 492 1886

(சி-7252)



## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்
காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(7871)



## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

(சி-8146) Skyline



சுவதேசி SWADESHI ESTD 1941

# கோம்பா பேபி சுகாதார முகாம்




16ம் தேதி ஒகஸ்ட் 2014
காலை 8.00 முதல
மதியம் 2.00 வரை
வீரசிங்கம் மண்டபம
யாழ் நகர்

இலவச
மருந்துகள், பரிசிகிச்சை, வைத்திய ஆலோசனைகள் மற்றும் பரிசுகள்.

15 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான இலவச சுகாதாரமுகாம்
கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட வைத்திய நிபுணர்கள் தலைமை : Dr. லக்ஷ்மன் L.வீரசேன

(சி-8143)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா-இஸ்ரேல் நாட்டு கொடிகள் எரிப்பு



(கொழும்பு)

பாலஸ்தீன காஸா மக்களுக்கு ஆதரவாகவும், பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போதுள்ள யுத்த நிறுத்தம் தொடர வேண்டும் என்றும் வலியுறுத்தி கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசங்களில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் இந்த அமைதிப் பேரணி இடம்பெற்றது.

கல்குடா உலமா சபையும், கல்குடா மஜ்லிசுல் சூரா சபையும் இணைந்து ஏற்பாடு செய்த அமைதிப் பேரணியும் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை, பிறைந்துரைச்சேனை, மாவடிச்சேனை, செம்மண்ணோடை, காவத்தமுனை போன்ற பிரதேசத்தில் உள்ள பதினெட்டு ஜும்ஆ பள்ளிவாசல்களிலிருந்து வந்த பொதுமக்கள் ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடினர்.

அங்கு காஸா மக்களின் இன்றைய நிலைமை என்ற தலைப்பில் கல்குடா சூரா சபைத் தலைவர் மௌலவி.ஏ.ஜீ.ஹாமீத் சதகா உரை நிகழ்த்தியதுடன், காஸா மக்களின் நிம்மதிக்காக வேண்டியும், எமது நாட்டின் அமைதிக்காக வேண்டியும் இடம்பெற்ற தூஆ பிராத்தனை கல்குடா உலமா சபை உப தலைவர் மௌலவி ஏ.எம்.சுபைர் முப்தி நடத்தினார்.

இறுதியாக காஸா மக்களுக்கு ஆதரவாகவும், பாலஸ்தீன மற்றும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போது யுத்த நிறுத்தம் தொடர வேண்டும் என்ற மகஜரை ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்துக்கும் சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்குமான மகஜர்கள் கல்குடா உலமா சபை மற்றும் கல்குடா மஜ்லிசுல் சூரா சபை உறுப்பினர்களால் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபர் மற்றும் ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் சார்பாக உதவி திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் ஆகியோரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இப்பேரணியின் போது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாட்டு கொடிகள் எரிக்கப்பட்டன. (6)

## வேலாயுதம் எம்.பியாக சத்தியப்பிரமாணம்

பதுளை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக கே.வேலாயுதம், நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஊவா மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த ஹரின் பெர்னாண்டோவின் வெற்றிடத்திற்கே கே.வேலாயுதம் நியமிக்கப்பட்டுள்ளார். (6)

## இலங்கை அகதிகள் இந்தியாவில் கைது

தமிழ்நாட்டின் கரையோர நகரான ஓரியூரில் இருந்து சட்டவிரோதமாக படகொன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்லமுயன்ற 9 இலங்கை அகதிகளை, இந்திய பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டின் வெவ்வேறு அகதிகள் முகாம்களில் இருந்து வந்திருந்த ஒன்பது பேரும் ஓரியூரில் புனித அருளானந்தர் கிறிஸ்தவ தேவாலயத்திற்கருகில் உள்ள அறைகளில் கடந்த இரண்டு நாட்களாக தங்கியிருந்துள்ளனர்.

பொலிஸார் தங்களை கண்காணிப்பது இவர்களுக்கு தெரியவந்தவுடன் வேறு இடமொன்றிற்கு செல்ல முயன்றுள்ளனர்.


இருந்தும் இவர்களில் அறுவர் தேவாலய வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், கார் ஒன்றில் தப்பிச்செல்ல முயற்சித்த மூவரையும் இடைமறித்து கைது செய்துள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்தனர். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 40 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 |
| தக்காளி | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 100 | 100 | 140 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 120 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 80 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 80 | 50 |
| போஞ்சி | 100 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 101

சுகுனா ஜி-ஸ்ரார்





தர்ஷ் தர்ஷசன்



டிசா டிலா விபூ வித்தி குகன்





ரோஜா சிவா




சரவணபவன் கௌமாறன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுபலசேனா இப்படிக் கூறுகின்றது

# அட்டூழியங்களை வெளிக்கொணர காவியுடையினால் தான் முடியுமாம்

காவி உடையினை அணிந்தமையினாலேயே அரசாங்கத்தில் இருக்கும் கயவர்களின் அட்டூழியங்களை வெளிக்கொண்டு வர முடிகின்றது. அமைச்சர் ராஜித சேனாரத்ன எவ்வாறான வழக்கினை தொடர்ந்தாலும் முகம் கொடுக்கத் தயார்.

முடிந்தால் எம்முடன் மோதி அவர் வென்று காட்டட்டும் என சவால் விடும் கலகொட அத்தே ஞானசாரதேரர் இலங்கை ஒன்றும் சவுதி அரேபியா அல்ல என்பதை தவ்ஹீத் ஜமா அத்தினர் நினைவில் வைத்து கொள்வது நல்லது எனவும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக பொதுபலசேனா பௌத்த அமைப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**கேள்வி:-** தன்னை அவமதித்தமைக்காக 10 மில்லியன் நஷ்டஈடு கோரி அமைச்சர் ராஜித சேனாரத்ன உங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார். இதற்கு உங்களின் பதில் என்ன?

**பதில்:-** அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு வழக்கு தொடர்வதற்கான உரிமை உள்ளது. அதில் எவ்வித தடைகளையும் எம்மால் விதிக்க முடியாது. எனினும் எமக்கு உரிமையுள்ளது. இந்த நாட்டில் நடக்கும் அநியாயங்களை தட்டி கேட்பதற்கு. அதையே நாம் செய்து வருகின்றோம். நாம் காவியுடையை அணிந்த அடாவடிக்காரர்கள் என அமைச்சர் ராஜித சொல்கின்றார். நாம் காவியுடையினை அணிந்தமையினாலேயே இவர்கள் செய்யும் அட்டூழியங்களை வெளிக்கொண்டு வர முடிகின்றது. இந்த காவி இருப்பதனால் தான் எவருக்கும் அஞ்சாது செயற்பட முடிகின்றது.

எமக்கு எதிராக அமைச்சர் வழக்கு தாக்கல் செய்வது அவரின் உரிமை. அதேபோல் ராஜித செய்த ஊழல்கள் தொடர்பிலான அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன. அவை அனைத்தையும் நாம் முன் வைப்போம். அதேபோல் நாம் நியாயமாக போராடுகின்றோம். எனவே எம்முடன் மோதி அவர்களால் சாதிக்க முடியாது. முடியுமானால் எம்மிடமிருந்து இவர்கள் ஒரு ரூபாயேனும் பெற்றுக்காட்டட்டும். அது அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு நான் விடுக்கும் சவாலாகும்.

**கேள்வி:-** பொதுபலசேனா அமைப்பினை தடை செய்து உங்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என தவ்ஹித் ஜமாஅத் எனும் இஸ்லாம் அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?

**பதில்:-** எமது இயக்கத்தை தடை செய்து என்னை சட்டத்தின் முன் நிறுத்த தவ்ஹித் ஜமா அத் அமைப்பு கோரிக்கை விடுக்க முன்னர் இவர்களை கைது செய்ய வேண்டும். இலங்கையில் முஸ்லிம தீவிரவாதமொன்று உருவாவதே இவ் இஸ்லாமிய அமைப்பினரால் தான். சிங்கள பௌத்த இனத்திற்கு அழிவு ஏற்படுமென்றால் அது தவ்ஹித் ஜமா அத் அமைப்பினால் தான் ஏற்படும். அதற்கு முன்னர் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# மீண்டும் புலி முத்திரையா?

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை மீண்டும் கைது செய்து புலி முத்திரை குத்தியுள்ளமை ஏன் என்றும் அதற்கான விளக்கத்தை தருமாறும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஆளும் கட்சியின் 'நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன், பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர், விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்திற்கு பின்னர் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு பல வருடங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு சமூகத்துடன் மீண்டும் இணையவைத்தோம் என்று உள்நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால், அரசாங்க பொலிஸார் மீண்டும் அவர்களை புலிச் சந்தேக நபர்கள் என்று கூறி கைது செய்திருப்பதற்கான விளக்கத்தை தர வேண்டும்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர்களை இழிவுபடுத்தியும் உடனடியாக வெளியேறுமாறும் சுவர்களில் எழுதியும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அது மட்டுமின்றி பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் மாணவர் ஒருவரை எவ்வித காரணமும் இன்றி கைது செய்துள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக பொதுபல சேனா தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது போன்று தமிழர்களுக்கு எதிராக பொலிஸார் முன்னெடுத்துள்ள இந்நடவடிக்கைக்கு எனது பாரிய கண்டனத்தை பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்துள்ளேன்.

அரசாங்கத்திற்கு கீழ் வரும் பொலிஸார் இவர்களை மீண்டும் விசாரணைக்கென்று கைது செய்வது எவ்விதத்தில் நியாயமானது. இது அரசாங்கத்தின் போலி முகத்தை காட்டுகின்றதா என கேள்வி எழுகின்றது. புனர்வாழ்வளிக்கப்படுவது என்பதன் அர்த்தத்தை பொலிஸாருக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் பயிற்சி பட்டறை நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# எஸ்.எம்.எஸ். அனுப்பிய நான்கு பேருக்கு பிணை

(கொழும்பு)

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைத்து, அவர்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தும் விதத்தில் குறுந்தகவல்களை( எஸ்.எம்.எஸ்) அனுப்பியதாக கூறப்படும் நால்வரையும் கொழும்பு நீதவான் கிஹான் பிலபிட்ட தலா 10 ஆயிரம் ரூபாய் ரொக்க மற்றும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணைகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விடுவித்துள்ளார்.

இந்த நால்வரும் கொழும்பு பன்னல மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் வைத்து கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

எனினும் சந்தேக நபர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி சுஹைர் சந்தேக நபர்கள் குறுந்தகவல்களை அனுப்பவில்லை என்றும் ஏற்கனவே வந்த குறுந் தகவலுக்கே பதிலளித்துள்ளனர் என்றும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

குவைத்தில் வசிக்கும் இலங்கை பிரஜை ஒருவர் நீர்கொழும்பில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்பிய தகவலை அவர் மேலும் மூவருக்கு பகிர்ந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# எம்.பிக்கு பிணை

பிரதித் தேர்தல் ஆணையாளரை அச்சுறுத்தியமை மற்றும் அவரது கமராவை பறித்த குற்றச்சாட்டுக்களின் பேரில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகம, ஊவா மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் அனுர விதானகம ஆகியோருடன் மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சந்தேக நபர்கள் மூவரும் மஹியங்கனை பொலிஸாரிடம் சரணடைந்தபோது கைதுசெய்யப்பட்டனர்.

தேனுக விதானகம, அனுர விதானகம ஆகியோர் ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், கமராவை பறித்ததாகக் கூறப்படும் மற்றைய சந்தேக நபர் நாளை 11 ஆம் திகதி வரை

## பிரிவுத்துயர் பகிர்வு



### முருகுப்பிள்ளை பிள்ளையினார்

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை பிள்ளையினார் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி இராசரட்ணம் சொர்ணரட்ணம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் சொர்ணரட்ணம் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave, Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நமசிவாயம் கணேசலிங்கம்

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Pinner ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் கணேசலிங்கம் கடந்த மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு St. Marylebone Crematorium,E End Rd, London N2 ORZ,UK என்னும் முகவரியில் நடைபெறும்.



### கதிரேசு மகேஸ்வரன்

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரேசு மகேஸ்வரன் கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தனநாயகம் தனப்பிரகாசன்

உடுவில் தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனநாயகம் தனப்பிரகாசன் (சாவகச்சேரி LIC விற்பனை மேற்பார்வையாளர்)கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கந்தசாமி ஐயர் காமாட்சி அம்பிகை அம்மா

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஐயர் காமாட்சி அம்பிகை அம்மா கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



### திருமதி ஐயாத்துரை பரமேஸ்வரி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரமேஸ்வரி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நடராசா செல்லம்மா

தபாற்கந்தோர் வீதி,நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை சேர்ந்த நடராசா செல்லம்மா(ஓய்வு பெற்ற ஆசிரியை- ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை, கல்வயல்- சாவகச்சேரி) கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி சுப்பையா மருதலிங்கம்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Neuilly- Sur- Marne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பையா மருதலிங்கம் கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு La Maison Funeraire,31,rue Paul et Camille Thomoux,93330 Neuilly-Sur-Marne என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூர்யா இடத்தில் சிம்பு



சூர்யாவுக்காக கௌதம் மேனன் தயார் செய்த கதையில் நடிக்கப்போகிறாராம் சிம்பு. கௌதம் மேனன் இயக்க விருந்த துருவநட்சத்திரம் படத்தில் சூர்யா நாயகனாக நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருந்தார். இந்நிலையில் சில கருத்து வேறுபாடு காரணமாக சூர்யா அப்படத்திலிருந்து தானாகவே விலகிக் கொண்டார். இந்த சூழலில் கௌதமுக்கு கைகொடுக்க தானாக முன்வந்துள்ளாராம் சிம்பு. சூர்யாவுக்கு தயார் செய்த கதையில் சில மாற்றங்களை மட்டும் செய்து அதில் . தானே நடிக்க சம்மதித்து, ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளாராம்.

## திரை விமர்சனம்
## ஜிகர்தண்டா


குறும்பட இயக்குநர் சித்தார்த்துக்கு, இரத்தம் தெறிக்கும் கேங்ஸ்டர் கதை பிடித்தால் ஒரு படம் இயக்கும் வாய்ப்பு கிடைக்கும். மதுரையை ஆட்டிப் படைக்கும் "அசால்ட்" சேதுவை கேஸ் ஸ்டடி செய்து, கதை பிடிக்க மதுரை வருகிறார். மதுரையின் டிரேட்மார்க்கான "சத்தம்..ரத்தம்" கதை தான். ஆனால், அதில் "ரௌடி" வாழ்க்கையில் சினிமா என்று வித்தியாச ரூட் பிடித்து ஜாலி ரெய்டு அடித்திருக்கிறார் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ். பேசியே கொல்லும் சங்கிலிமுருகன், டிரிபிள்எக்ஸ் ஆதர்ச அடியாள், கறுப்பு ஆட்டைக் கண்டு பிடிக்கும் தாதா வியூகம், தண்ணி இல்லா கிணற்றுக்குள் தண்ணி பார்ட்டி, புடைவை திருடும் ஹீரோயின், நடிப்பு வராவிட்டால் கொடுக்கப்படும் "கில் அண்ட் லா.ஃ.ப்" தண்டனை... என உள்ளே சில பல ஆச்சர்யங்கள்!

ஜிகர்தண்டாவுக்கு கடல்பாசி, இந்தப் படத்துக்கு சிம்ஹா. ப்பா... என்னா உதார்... என்னா கெத்து! "என்னைப் பத்தி அவ்ளோ எழுதிட்டு பொம்மை படமா போடுற? என நிருபரை எரிப்பது, ஒரு உசுர எடுத்துட்டுத் தான் உள்ள வர்றோம். இன்னொரு உசுர குடுத்தாத்தான் வெளிய போக முடியும் என பிலாச.ஃ.பி பேசுவது என முதல் பாதி முழுக்க ரணகளம். அதே இடைவேளைக்குப் பின், நான் சங்கர்-கணேஷ் ரசிகன் என இறுக்கமாக முறைக்கும் இடங்களில்...... அதிகளம்! ஆசையும் காசும் இருக்கிறவன் எல்லாம் நுழையுறதுக்கு, சினிமா என்ன அயிட்டம் வீடா? எனப் பொங்கி இயலாமையையும் கோபத்தையும் ஒருசேரக் கடத்தும் சித்தார்த், சிம்ஹாவுக்கு ஸ்பேஸ் கொடுத்து அடக்கியே வாசிக்கிறார். புடைவை திருடுவது, சித்தார்த்தைச் சிக்கவைப்பது... என, கொஞ்சம் நெகட்டிவ் ரோல் லட்சுமிமேனனுக்கு. அவ்வப்போது முகம் காட்டும் அவருக்கும் சித்தார்த்துக்குமான காதலில் எந்த உயிர்ப்பும் இல்லை. அத்தனை பெரிய சம்பவத்துக்குப் பிறகு சிம்ஹா அலட்டிக்கொள்ளாமல் கழிவறைக்குச் செல்வது, பொலிஸ் வந்ததும் வீட்டுக்குள்ளே பிணத்தை மறைப்பது, "நான் ஒரு இங்கிலீஷ் படம் பார்த்தேன்.. அது மாதிரி செய்" என்று துப்பாக்கியில் ஒரே ஒரு புல்லட் போட்டு மிரட்டுவது, கேமரா பற்றரியை சார்ஜ் ஏற்றிக்கொண்டு அடிதடியைத் தொடர்வது...... என ரணகள ரௌத்திரங்களுக்கு இடையிலும் சாமர்த்தியரகக் கிச்சுகிச்சு மூட்டுகிறார்கள்.

எல்லாம் சரி...... ஆனால், முதல் பாதிக்கும் இரண்டாம் பாதிக்கும் சம்பந்தமே இல்லாமல் வெவ்வெறு ட்ரீட்மென்ட்டில் பயணிக்கிறதே படம். ஒரே கட்டணம், இரண்டு சினிமா பார்த்த .ஃ.பீல் பிரதர். "அ.குமார்" சினிமாவில் அப்படி என்ன ஹ்யூமர் இருக்கிறது என்று கொண்டாடுகிறார்கள்? இரண்டாம் பாதியில் சித்தார்த்தின் சினிமா கேரியர் என்ன ஆனது என்று டென்ஷன் எகிற வேண்டுமே? வெட்டு, குத்து என இரத்தம் தெறிக்கும் சினிமாவில் "நல்லது எங்கே?" என்று தேடிப் பார்த்தால்....... நஹிஜி. விசில் இசை வைத்தே டெரர் பின்னணி கொடுப்பதிலும், "கண்ணம்மா கண்ணம்மா...", "பாண்டி நாட்டு........" பாடல்களிலும் விளையாடுகிறார் சந்தோஷ் நாராயணன். கேவ்மிக் யுஆரியின் ஒளிப்பதிவு... இருளிலும் இடுக்கிலும்கூட கேண்டிட் தத்ருபம்!



"ஜிகர்தண்டாவில்" "தண்டா" என்றால் கோல்டு. இதுகொஞ்சம் ஜாலியான ஐஸ் கோல்டு காபி!




## அமெரிக்காவில் அசத்திய மச்சான் நடிகை!





தமிழ் சினிமாவில் நமிதா நடிக்கவில்லை என்றாலும் நமிதாவுக்கான ரசிகர்கள் அப்படியேதான் இருக்கிறார்கள். நமிதாவின் இடத்தை பிடிக்க போவதாகச் சொன்ன நடிகைகள் நாலே மாதங்களில் காணாமல் போய்விட்டனர் என்பது தான் உண்மை. தமிழகம் மட்டுமல்ல அமெரிக்காவிலும் நமீதாவின் ரசிகர்கள் அநேகம் பேர் உள்ளனர் என்பதை சொல்லாமல் சொல்லியது மெகா ஸ்டார் நிகழ்ச்சி. மெகாஸ்டார் கொண்டாட்டத்தை தொகுத்து வழங்கியவர் விஜய் டிவியின் தொகுப்பாளினி டிடி. நடிகர் டிங்குவின் தலைமையில் நடன நிகழ்ச்சிகள் அரங்கேற சின்னத்திரை நட்சத்திரங்கள் ஜோடி நம்பர்1 புகழ் ஆனந்தி, டிஜே பிரசாந்த் ஆகியோரும் கலந்து கொண்டனர். நமிதா, நெப்போலியன், சின்னத்திரைப் புகழ் ரோபோ ஷங்கர் போன்றோர் கலந்து கொண்டு அமெரிக்க வாழ் ரசிகர்களை மகிழ்வித்ததனர். சின்னத்திரை நட்சத்திரங்கள் உயிரைக் கொடுத்து நடனமாட மேடையில் Cat walk போய் ரசிகர்களிடம் கைத்தட்டல் வாங்கிவிட்டாராம் நமீதா.

## மீடியா மீது நயன்தாரா கோபம்!



கணேஷ் வெங்கட்ராமுடன் காதல் என செய்தி...... தன்னை பற்றி வதந்தி பரப்புபவர்கள் மீது சட்டப் படி நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் என்று நயன்தாரா எச்சரித்துள்ளார். தமிழ் சினிமாவில் அதிக அளவு காதல் சர்ச்சைகளில் சிக்கியவர் நயன்தாராவாகத் தான் இருக்கும். சிம்பு, தனுஷ் பிரபு தேவா என சில ஹீரோக்களுடன் சேர்த்து கிசுகிசுக்கப்பட்ட அவர், இப்போது ஹீரோ அல்லாத குணச்சித்திர நடிகருடன் சேர்த்து பேசப்படுகிறார்.

## அந்த நாள் ஞாபகம்...



தாயாருடன் சத்யராஜ்

## அனுஷ்கா என் பிரண்ட் தான்..... ஆர்யா



நடிகை அனுஷ்காவுக்கும், தனக்கும் இடையில் எந்தவித மோதலும் இல்லை என விளக்கமளித்துள்ளார் நடிகர் ஆர்யா. 2ம் உலகம் படத்தில் ஆர்யாவுடன் ஜோடி சேர்ந்து நடித்திருந்தார் அனுஷ்கா. இந்நிலையில், சமீபத்தில் ஆர்யாவின் . தயாரிப்பில் அவரது தம்பி நாயகனாக நடிக்கும் அமரகாவியம் பட ஆடியோ ரிலீஸ் நடைபெற்றது. அவ்விழாவிற்கு தன்னுடன் நடித்த அனைத்து நடிகைகளையும் அழைத்திருந்தார் ஆர்யா. தங்களது பட விழாவிற்கே கூட வராத திரிஷா, நயன்தாரா உள் . ளிட்ட நடிகைகள் இந்த விழாவில் பங்கு கொண்டு திரையுலகினரை ஆச்சர்யத்தில் ஆழ்த்தினர். ஆனால், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அனுஷ்கா மட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. நயன்தாராவிற்கும் அனுஷ்காவிற்கும் தெலுங்குப் படவுலகில் நிலவும் போட்டி காரணமாகவே அனுஷ்கா விழாவைப் புறக்கணித்தார் எனச் செய்தி பரவியது. எனவே இருவருக்கும் இடையே எந்த மோதலும் இல்லை. சுமுகமான நட்பு உள்ளது" என இவ்வாறு அவர் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வயாவிளான் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா திருப்பலி பூசைகள் அண்மையில் நடைபெற்ற போது....

(படங்கள் மானிப்பாய் செய்தியாளர்)




கெருடாவில் நற்பணி மன்றத்தின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும் கெருடாவில் விவேகானந்தர் சனசமூக முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நற்பணி மன்றத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு சான்றிதழும் புலமை ப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி என்பன வழங்க ப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சிவநகர் செய்தியாளர்)



தென்னைப் பயிர்ச்செய்கையினால் சிப்நன திட்டத்தின்கீழ் ஜெயபுரம் மகாவித்தியாலயம் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முழங்காவில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் இணைந்து தென்னங்கன்றுகளை அண்மையில் வழங்கியதைப் படத்தில் காணலாம்.

**நிழல்கள்**





வயாவிளான்குட்டியப்புலத்தில்புனரமைக்கப்பட்ட அம்பாள்சனசமூகநிலையம்அண்மையில்திறந்துவைக்கப்பட்டது. இதன்போதுபாரம்பரியகைத்தொழில்கள்மற்றும்சிறுதொழில்முயற்சி அபி விருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி சனசமூக நிலையத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)




ஆடிப்பூரத்தை முன்னிட்டு கஞ்சிக்கலய ஊர்வலம் அண்மையில் திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி பேரணியாக சட்டநாதர் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள திவ்விய ஜீவன மண்டபத்தை சென்றடைந்த போது...

(படம்: மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.





சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இருந்து தேசிய மட்ட தமிழ்த்தின நாடகப்போட்டியில் 2ஆவது வருடமாகவும் முதலாம் இடத்தை வெற்றிகொண்ட குழுவினர் பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டபோது...

(படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

888

## தீர விசாரியாத அரசன்

ஆதித்தவர்மன் என்ற அரசன் ஒருவன் இருந்தான்.

சிவவர்மன் என்ற அமைச்சன் அரசனின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தான்.

ஒரு சமயம், தன்னுடைய முதல் மனைவி கர்ப்பமுற்றுள்ள செய்தி அரசனுக்குத் தெரிந்தது.

அதை அறிந்ததும் அரசன் திடுக்கிட்டான்.

ஏனெனில் இரண்டு ஆண்டுகளாக அரசன் அவளை ஏறிட்டுப் பார்த்ததே இல்லை.

அப்படி இருக்கும்போது அவள் கருத்தரிக்க யார் காரணமாக இருக்க முடியும் என்று யோசித்தான்.

தன்னையும் அமைச்சன் சிவவர்மனையும் தவிர வேறு எவருமே அந்தப்புரத்துக்கு உரிமையோடு நுழைய முடியாதே.

ஆகையால் அமைச்சனின் துரோகச் செயலே இது என்று கருதி அவனை மரண தண்டனைக்கு உள்ளாக்கத் தீர்மானித்தான் அரசன்.

ஆனால், மரண தண்டனையைப் பகிரங்கமாக நிறைவேற்ற முடியாத ஒரு சங்கடம் இருந்தது.

அந்தப்புரத்து ரகசியம் நாட்டிற்குத் தெரிந்தால் அவமானம் ஆகிவிடுமே என்று கருதி அரசன் தந்திரத்தைக் கையாண்டான்.

அரசனுக்குச்சிறிய தந்தையான சிற்றரசன் போகவர்மன் பல மைல்களுக்கு அப்பால் ஒரு நகரத்தில் இருந்தான்.

அவனுக்கு அரசன் ஒரு கடிதம் எழுதி முத்திரையிட்டு அதை அமைச்சன் சிவவர்மனே நேரில் போய் கொடுத்து வரும்படி உத்தரவிட்டான்.

சிவவர்மன் கொண்டுபோய்க் கொடுத்த கடிதத்தைப் படித்த சிற்றரசன் போகவர்மன் திடுக்கிட்டான்.

சிவவர்மனைக் கொன்றுவிடும்படி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், அதற்கான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை.

தகுந்த காரணம் இல்லாமல் ஒருவனைக் கொல்ல நேர்மையான எந்த அரசனாவது சம்மதிப்பானா?

இப்படி பலவாறு யோசித்துக் குழப்பமடைந்த போகவர்மன், சிவவர்மனிடமே விவரத்தைக்கூறி மரண தண்டனையை என் நாட்டில் நிறைவேற்றச் சொல்லும் காரணம் என்ன என்று கேட்டான்.



அதைக்கேட்டதும் சிவவர்மன் கடகட எனச் சிரித்தான். அவனோ மகா தந்திரசாலி.

அரசே மரணத்தைக் கண்டு நான் அஞ்சவில்லை.

ஆனால், ஆதித்தவர்மன் தன் சிறிய தந்தைக்கே அழிவைத் தேடுவதுதான் வருத்தம் அளிக்கிறது என்றான் சிவவர்மன்.

ஏற்கனவே, குழப்பத்தில் இருந்து கொண்டிருக்கும் போகவர்மன் அமைச்சன் கூறியது புரியாமல் தவித்தான்.

அப்போது போகவர்மனின் குழப்பத்தைத் தெளிய வைப்பவனைப் போல் அரசே! நான் எந்த நாட்டில் வைத்துக் கொல்லப்படுகிறேனோ அந்த நாட்டில் 12 ஆண்டுகள் மழையே பெய்யாது. பஞ்சத்தால் நாடு நாசம் அடையும். அரசியல் புரட்சி ஏற்படும்.

இது ஆதித்தவர்மனுக்குத் தெரியும். அதனால்தான் என்னைக் கொல்ல உங்கள் நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறேன் என்றான் தந்திரசாலியான சிவவர்மன். அவன் கூறியது உண்மையென நம்பிய போகவர்மன், ஆதித்தவர்மனின் கெட்ட எண்ணத்தை அறிந்து வெறுப்படைந்தான்.

சிவவர்மனுக்கு வேண்டியபொருளைக் கொடுத்து கருணை கூர்ந்து தன் நாட்டை விட்டு வேறு எங்கேயாவது உடனே போய்விடும் படி கேட்டுக்கொண்டான் போகவர்மன். சிவவர்மன் உயிர் பிழைத்ததுடன் செல்வச் செழிப்புடன் வேறு ஒரு நாட்டில் வாழ்ந்தான்.

அவசரப்பட்டு சிவவர்மனைக் கொலை செய்துவிடும்படி உத்தரவிட்டது பெரிய தவறு என்பதை சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆதித்தவர்மன் உணர்ந்து வருந்தினான்.

தன் மனைவி கர்ப்பமுற்றதற்கு அமைச்சன் சிவவர்மன் காரணம் அல்ல என்பதும் அந்தப்புரத்தில் பெண் வேடத்தில் பணி புரிந்த ஒரு ஆடவனே அதற்குக் காரணம் என்பது வெளியாயிற்று. தீர விசாரியாமல் புத்திசாலி அமைச்சனுக்குத் தீங்கு இழைத்து விட்டோமே என்று அரசன் வருந்தினான்.

## 08.2014 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 612 - அசிரியப் பேரரசன் சின்சரிஷ்கன் கொல்லப்பட்டான்.
- 610 - முகம்மது நபி குர்ஆனைப் பெற்ற நாள். இது இஸ்லாமில், "லாய்லாட் ஐ-காதர்" நாள் எனப்படுகிறது.
- 955 - புனித உரோமப் பேரர்சன் முதலாம் ஒட்டோ மகியார்களைத் தோற்கடித்து 50 ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
- 1519 - மகலனின் ஐந்து கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவில நகரில் இருந்து புறப்பட்டன.
- 1675 - ரோயல் கிறீனிச் வானாய்வகத்துக்கான அடிக்கல் லண்டனில் நாட்டப்பட்டது.
- 1680 - நியூ மெக்சிகோவில் ஸ்பானிய குடியேறிகளுக்கெதிராக புவெப்லோக்களின் எழுச்சி ஆரம்பமானது.
- 1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி இயுஸ்ட்டாச்சியஸ் டிலனோய் என்பவனைச் சிறைப்பிடித்தார்.
- 1776 - அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.
- 1792 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ அரண்மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனைக் கைது செய்தனர்.
- 1809 - குவிட்டோ (தற்போதய ஈக்குவாடோரின் தலைநகர்) பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1821 - மிசூரி ஐக்கிய அமெரிக்காவின் 24 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் மிசூரியின் தென்மேற்குப் பகுதியில் கூட்டணிப் படைகளை வென்றனர்.
- 1904 - ரஷ்யப் படைகளுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையில் மஞ்சள் கடலில் கடற்போர் இடம்பெற்றது.
- 1913 - பால்கான் போர்கள்: பல்கேரியா, ருமேனியா, செர்பியா, மொண்டெனேகுரோ, கிரேக்கம் ஆகிய நாடுகள் புக்கரெஸ்ட் நகரில் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகளகுவாமில் நிலை கொண்டிருந்த கடைசி ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1948 - ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் (Atomic Energy Commission) துவக்கி வைத்தார்.
- 1990 - மகெலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
- 2000 - உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது (www.ibiblio.org தரவின்படி).
- 2003 - யூரி மலென்செங்கோ விண்வெளியில் திருமணம் புரிந்த முதலாவது மனிதர்.

### பிறப்புகள்

- 1894 - வி. வி. கிரி, 4ஆவது இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. 1980)


### இறப்புக்கள

- 1790 - [illegible] (பி. 1723)
- 1899 - சி. தியாகர், நல்லூரைச் சேர்ந்த தமிழறிஞர்
- 1980 - யாஹ்யா கான், பாகிஸ்தான் அதிபர் (பி. 1917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்


## "சாதனை நாயகனின் சரித்திரம்"





31

...காதிர் கேட்ட கேள்விக்குஅமைதியாக பதில் கூறிய சச்சின் தனது முழுத்திறமை யைத்தின் அதிரடி பேட் டிங்கில்காட்டினான் உங்க ரெண்டு பேருக்கும் போட்டின்னா என்னை ஏண்டா சாவடிக்கிறீங்க என்று அந்தப் பந்து க்கு மட்டும் வாய் இருந்தால் கதறி அழுதிருக் கும். அந்த அளவிற்கு இந்த அடி போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா? என்று காதிர் வீசிய பந்துகள் ஒவ்வொன்றையும் சச்சின் சொல்லிச் சொல்லி அடித்தான். மூன்று பந்து களைத் தொடர்ச்சியாக சிக்சராக அடித்தான். ஒவ்வொன்றும் காதிர் தலைக்கு மேலே ராக் கெட் வேகத்தில் பறந்துச் சென்று பெவிலிய னில் போய் விழுந்தது. அடுத்து ஒரு ஃபோர். ஆக, காதிர் 6 பந்துகளில் மொத்தம் 27 ரன் கள். இவற்றை எல்லாம் எதிரே பார்த்துக்கொண் டிருந்த ஸ்ரீகாந்த் தனக்கு வாரிசாக ஒரு அதி ரடி ஆட்டக்காரன் கிடைத்துவிட்டான் என்றே பூரிப்படைந்தார். ஸ்ரீகாந்த் 13 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். ஆட்ட இறுதியில் சச்சின் 18 பந்துகளில் மொத்தம் 53 ரன்கள் குவித் தான். சச்சின் கடுமையாகப் போராடியும் இந்தியாவால் வெற்றிபெறமுடியவில்லை. 4 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வியைத் தழுவியது. தோல்விதான் என்றாலும் போரா



டித் தோற்ற கௌரவமான தோல்வி அது என்று பத்திரிகைகள் அந்தப் போட்டியைப் பற்றி விமர்சனம் செய்திருந்தன. அத்துடன் சச்சினின் அபார ஆட்டத்தைப் புகழ்ந்து தள்ளியிருந்தன. தீப்பந்துகளாகத் தான் எறிந்த அனைத்தையும் பூப்பந்துகளாக மைதானம் முழுவதும் சிதற

### குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

அடித்த சச்சினை காதிர் மனதாரப் புகழ்ந்தார். போட்டி முடிந்த அன்றைக்கே பத்திரிகையாளர் சந்திப்பில் காதிர் கூறியதைக்கேளுங்கள்: இந்தச் சிறுவன் கிரிக்கெட்டை பொறுத்தவரை மீகப் பெரிய ஜீனியஸ். இவன் சர்வதேசக் கிரிக் கெட்டின் மிகப்பெரிய பௌலர்களுக்கு தண் ணிக் காட்டும் நாள் வெகுதூரத்தில் இல்லை. பால் வடியும் முகத்துடன் பள்ளி செல்லும் சின்னஞ்சிறிய பையனாக களம் இறங்கிய இவனிடம் அசாத்தியத் திறமை இருக்கிறது. எங்கள் அணியிலிருந்த மிகச் சிறந்த பௌளர் கள் வீசிய பந்துகளை அவன் அடித்து விளை யாடிய விதம் எங்களை அசர வைத்துவிட்டது. இவன் ஆடிய முதல் டெஸ்டில் இவனுக்கு பந்து வீசியது வாக்கர் யூனுஸ். மிக வேகமான பந்து அது. அதைக் கவர் டிரைவ் அடிக்க சச் சின் முயல அது பேட்டில் படாமல் சென்றுவிட் டது. ரன் எடுக்க முடியாவிட்டாலும் சச்சின் விளையாடிய விதம் என்னைக் கவர்ந்தது. காரணம் அந்த ஸ்டைல் சச்சினுக்கே உரித்த ஒன்று. வேறு எந்த பேட்ஸ்மெனின் சாயலை யும் அதில் நான் பார்க்கவில்லை. சச்சின் தன க்கென ஒரு புதிய பாணியை உருவாக்கிக் கொள்வான் என்றே தோன்றுகிறது. எதிர்கால த்தில் உலகம் புகழும் மிகச்சிறந்த கிரிக்கெட் வீரனாக இவர் நிச்சயம் வருவான் என்று என க்கு நானே சொல்லிக் கொண்டேன். சச்சினு க்கு பந்துவீசும் முன்பு அவனுக்கு சில அறிவு ரைகள் கூறினேன். உலகில் சிறந்த சுழற் பந்து வீச்சாளன் உனக்கு பௌலிங் செய்கிறாய் என்று பயந்தால் விளையாட முடியாது என்றேன் அவனிடம். அதற்காக சச்சினுக்கு நான் மெதுவா கப் பந்துகளை வீசவில்லை. முழு வேகத்து டன்தான் அனைத்துப் பந்துகளையும் வீசி னேன். ஆனால், எதிர்பார்த்ததற்கு மேலாகவே சச்சின் நான் வீசிய ஒவ்வொரு பந்தையும் துவம்சம் செய்தான். சச்சினின் அப்பாவித்தனம் மற்றும் அவனது அயராத உழைப்பு இரண் டையும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது என்று வாயார வாழ்த்தித்தள்ளினார். குஜ்ரன்வா லாவில் நடைபெற்ற முதல் அங்கீகரிக்கப்பட்ட ஒருநாள் சர்வதேசப்போட்டியில் அக்ரம் வீசிய பந்தை சச்சின் அடிக்க அதை யூனுஸ் காட்ச் பிடிக்க பூஜ்யத்தில் அவுட் ஆனான். இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு ஒருநாள் பந்தயங்களில் சச்சின் தேர்வு செய் யப்படவில்லை. மொத்தம் நான்கு ஒருநாள் போட்டிகளில் ஒன்று ரத்தாக, ஒன்று கைவிட ப்பட மீது இரண்டில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. முதல் டெஸ்ட் கராச்சியில் நடைபெற்ற போது மைதானத்திற்கு வெளியே ஒரு போஸ்டரில் சச்சின் புகைப்படத்திற்கு கீழே- குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை? என்ற வாசகம் காணப்பட்டது. ஒரு மாதம் கழித்து பெஷாவரில் நடைபெற்ற காட்சிப்போட்டிக்குப் பிறகு மைதா னத்திற்கு வெளியே மீண்டும் ஒரு சச்சின் புகைப்படத்துடன் ஒரு போஸ்டர். அதில் காண ப்பட்ட வாசகம்: இதோ ஒரு புலி வந்துவிட்டது. சொந்த நாட்டுக்காரன் பாராட்டுவதைவிட பாகிஸ்தான் போன்ற அயல் நாட்டுக்காரன்- அதுவும் நமக்குப் பங்காளி- அவன் சச்சினைப் பாராட்டுவது எவ்வளவு பெரிய விடயம். அந்தப் பாராட்டை சச்சின் தனது முதல் டெஸ்ட் பந்தய வரிசையிலேயே பெற்றுவிட்டான்.

**வாக்கரிடமிருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கிலிருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண் டும் என்று கூறுவதுபோல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.**

கே. ரமேஷ் (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 05 இன் பலன்கள்



### தோற்றம்

61

சனியுடன் புதன் சேர்ந்த ஆதிக்கப் பயன். உயரமாக சிவ ப்பாக அளவான பருமனுடனி ருப்பார். வேகமாகச் செயற்படுவார். அளந்து வைத்த அவயவங்களுடன் அழகாக இருப் பர். கண்கள் கவர்ச்சியாக பெரிதாக சிரிப்பது போல இருக்கும். முகம் சிறியதாக எடுப்பான மூக்குடன் இருக்கும். சற்றுப் பெரியவாயிருக்கும். பற்கள் வரிசையாக அளவாக இருக்கும். உதடு கள் சற்றுப் பருத்து இருக்கும். கவர்ச்சிகரமா னவர். எந்த வயதிலும் அழகாக இளமையு டன் சுறுசுறுப்பாக இருப்பர்.

### குணம்

அசைக்க முடியாத மன உறுதியுடன் சற் றுக் கொடூரமான மனமும் இருக்கும். இது கோபமுறும் போதுதான். மற்றபடி சாதுவாக அமர்ந்தபடி எதாவது செய்து கொண்டிருப்பார்.

மனம் எப்போதும் எதாவது யோசித்தவாறிரு க்கும். இவரைப் பெற்றவராலும் நெருங்கிப் பழகுபவராலும்கூட புரிந்துகொள்ள முடியாது. காரணம் இவர்கள் மனம் விட்டுப் போசாததே. நேரம் கிடைக்கும்போதெல்லாம் அரட்டையடி ப்பதோ புத்தகம் படிப்பதோ இன்றித் தூங்கிக் கொண்டிருப்பர். இதனால் இவர்களை சோம் பேறி என்று சொல்ல முடியாது. பலர் சேர்ந்து செய்வதைத் தனியாகவே செய்து முடிப்பர். இவரை எவரும் குறை சொல்லக்கூடாது. சொன் னால் உடனே கோபம் வந்து சவால்விடுவர். சிந்தனைத் திறனுடன் செயற்திறனும் புதுமை விருப்பமும் உடையவர். சற்று முரட்டுத்தன மும் உண்டு. முன்னுக்கு வரும் ஆர்வமும் இருக்கும். சிறுவயதில் சற்று மந்தமாகவே இருப்பர். பிறரைவிடத் திறமைசாலி எனப்பெயர் பெறப் போட்டியிடுவர். சிலசமயம் சோர்ந்து சுருண்டுகிடப்பதும் சிலசமயம் ஆர்த்தெழுந்து சுறுசுறுப்பாக வேலை செய்வதுமாக இருப்பர். பெண்களானால் அப்பா மீது அதிகம் பிரியம் வைத்திருப்பர். ஆண்களுக்கு அம்மா மீதே ஆசையிருக்கும். அதேபோல் பெண்களுக்குத் தம் மகன்மேலே பிரியம் அதிகமிருக்கும். ஆண் களுக்குமகள்மீதே அதிகம்பிரியம்உண்டு. மனம் குழம்பும்போது சரியாக வேலை செய்ய மாட் டார். அடிக்கடி குழம்பித்தவிப்பர். அதிக நேரம் தூங்கியே கழிப்பர். இது சனிக்குரிய தமோ குணத் தாக்கமாகும். இவர்களின் முரட்டுக் குணம் கண்டு அஞ்சியே இவர்களை வஞ்சிக்க வேண்டியவரே முன்வருவர். கெட்டவருடன் சேர்ந் தால்கெட்டபழக்கங்களை மிக விரைவில் கற்றுக் கொள்ளுவர். படிப்பு சிரமமாகவே இருக்கும். தமிழ், ஆங்கிலம் நன்கு வரும். மற்றப் பாடங் கள் கடினமாகவே இருக்கும். 23 வயதுக்குப் பிறகே புதனாதிக்கம் பயனளிக்கும்போது புத் தகம் படிக்கும் பழக்கம் வரும். பயணம் செய்வர். சுறுசுறுப்பாக எப்போதும் இருக்கத் தொடங்கு வர். எதையும் புரிந்து கொள்ளும் சூக்கும அறிவு இருக்கும். பொறாமை, ஆத்திரம் எல்லாம் குறை யும்.

ஓர் உயர்நிலையைப் பிடிக்க எதிர்நீச்சலடி க்கும்படியிருக்கும். எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளும் ஆர்மிருக்கும். தமிழ் மேல் பற்று இருக்கும். தம் இனம், மதம் வேண்டியவர் மேல் எல்லாம் பற்று நிறைய இருக்கும். கடவுள் பக்தி, பெரியோரிடம் மரியாதை இருக்கும். ஆனால், எவரிடமும் ஒட்டமாட்டார்.

தம்மை நேசிப்பவர் மேல் அன்பு உடைய வர். தமக்கு உதவியவர் மேல் நன்றி வைத்தி ருப்பர். எவருக்கும் பணியமாட்டார் பிறரிடம் இரக்கம் உண்டாகும். பிறருக்கு உதவுவர். ஆனால், அனைவருமே தம் சொற்படி கேட்க வேண்டும் என எதிர்பார்ப்பர். தேவைப்படுப வருக்கு வேண்டிய உதவி செய்வர். பொதுத் தொண்டு செய்து பிரபலமாக விரும்புவர். உயர்ந்தவராக வாழ விருப்பமிருக்கும்.

### குடும்பம்

பெரிய குடும்பத்தில் சகோதர சகோதரி களுடன் பிறந்திருப்பர். சண்டை சச்சரவிடுவர். காதல் விவகாரம் சிறுவயதிலேயே இடம்பெறும். எப்படியானாலும் திருமணத்தில் திருப்தி உண் டாகாது. தாமே தம் வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

தாமே தம் வாழ்வைக் கெடுத்தும்கொள்ளு வர். ஆண்களுக்குப் பெண்களாலும் பெண் களுக்கு ஆண்களாலும் எப்போதும் வம்பு ஏற் படும். சிரமங்கள் வரும்.

### தொழில்

ஆனாலும் படிப்பதிலும் தொழிலிலும் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். கல்வி விட்டுக் கூட மேலே தொடரும். கணக்கு, அக்கௌண் ட்ஸ், விஞ்ஞானம், கணினி, பொறியியல், மின்சாரம், மொழியியல், பத்திரிகைத் துறை பட்டம் பெறலாம். அத்துறைகளில் பெரிய வேலை பார்க்கலாம். அல்லது சிறுகச் சிறுக முன்னுக்கு வரலாம். மாடலிங், விளையாட்டு, சட்டம் படித்து வக்கீல் ஆகலாம். இன்ஜினிய ராகலாம். விவசாயம், பண்ணை வைக்கலாம். எலெக்ட்ரானிக் துறையிலும் வியாபாரமோ, வேலையோ செய்து பொருத்தம். மருத்து வராகலாம். பொருளாதாரம் படித்து ஐ.ஏ.எஸ். ஆகலாம். காண்ட்ராக்ட்கள் எடுத்துப் பணம் பண்ணலாம். விளையாட்டு வீரர் ஆகலாம். டி.டி.பி டிசைன் போட்டுத் தரலாம். பதிப்பகம் வைத்தல், நாடகம் போடுதல், நடித்தல், ஜோதிடம் கூறல், அயல்நாட்டுக்குத் தூதராகப்போதல் செய்யும்படி தொழில் அமையலாம். தகவல் பரிமாற்றத் துறையிலும் தந்தி தபால் தொலை பேசித் தொடர்பாகப் பணிபுரிவர். அரசாங்கத் திலோ, தனியார் அலுவலகத்திலோ வேலை பார்த்தாலும் சொந்தத் தொழில் செய்வதையே நாடுவர்.

### நோய்

நரம்புத்தளர்ச்சி இரத்தக் குறைவு இருக் கும். வாதம் தாக்காமலிருக்க யோகாசனம் பயிற்சி செய்தால் நல்லது. கை, கால் நடுக்கம், நீரோடாலிமர் வரும். வயிற்றுக்கோளாறு, பி. பி, நீரிழிவு, கண்கோளாறு, மனநோய், தலைவலி, முதுகு கழுத்துவலி வரலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே மாகாணசபையின் நோக்கம்


## முதலமைச்சர் சுட்டிக்காட்டு

வடக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே வடக்கு மாகாண சபையின் குறிக்கோள் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு குமுழமுனை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

குமுழமுனையில் ஒரு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு பற்றியுள்ளமை மன மகிழ்வை அளிக்கின்றது. உங்கள் மாவட்டம் பல தேவைகளைக் கொண்ட மாவட்டம் என்பது எனக்குத தெரியாத விடயமல்ல. இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை நான் அமைச்சர் ஆக்கவில்லை என்பதில் என்மீது மனவருத்தம் கொண்டுள்ளீர்கள் என்பதும் எனக்குத் தெரியாததல்ல.

ஆனால் மற்றைய மாவட்டங்களுக்குக் கிடைக்காத ஒரு சிறப்பை நீங்கள் கொண்டுள்ளீர்கள். மற்றைய மாவட்டங்களைப் பற்றி கூறாத ஒரு விடயத்தை நான் என் அமைச்சர்களிடம் மிகவும் ஆணித்தரமாகக் கூறி



யுள்ளேன். எந்த ஒரு நடவடிக்கையிலும் முல்லைத்தீவு மக்கள் பற்றிய கூடிய கரிசனையை நீங்கள் காட்ட வேண்டும் என்பதே அது.

அமைச்சர்களான டெனீஸ்வரனாக இருந்தால் என்ன, ஐங்கரநேசனாக இருந்தால் என்ன, இன்று இங்கு வீற்றிருக்கும் வைத்திய கலாநிதி சத்தியலிங்கமாக இருந்தால் என்ன, அல்லது அமைச்சர் குருகுலராஜாவாக இருந்தால் என்ன அல்லது நானாகத்தான் இருந்தால் என்ன எமது நடவடிக்கைகளில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குக் கூடிய கவனத்தையும் கவனிப்பையும் நாம் கொடுத்துக் கொண்டே தான் இருக்கின்றோம்.

கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் போன்ற பிரதேசங்களைப் பார்வையிட்டபின் மத்தியில் உள்ள மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன கொண்டுவந்து அந்த இடங்களைக் காட்டி உரிய நடவடிக்கைகள் எடுக்க டெனீஸ்வரனும் நாங்களும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம்.

ஐங்கரநேசனும் நாங்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் உள்நாட்டு நீர், நிலம் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். கல்வி மேம்பாட்டைப் பற்றி குருகுலராஜா தம்மால் இயன்றவற்றைச் செய்து கொண்டுதான் இருக்கின்றார்.

இன்று எமது சுகாதார அமைச்சர் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார். போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இந்த இடங்களில் ஒரு மறுமலர்ச்சியை, மறுசீரமைப்பை ஏற்படுத்துவதே எங்கள் குறிக்கோளாக இருக்கின்றது. எனினும் உங்கள் கிராமத்தை நவீன மயப்படுத்த நிதிதான் பெரும் பிரச்சினையாக உள்ளது. எவ்வகையிலேனும் உரிய நிதியைப் பெற்று மேலும் மேலும் உங்கள் கிராமங்களையும் அதில் வாழும் மக்களையும் மறுமலர்ச்சி பெற வைப்பதே எமது குறிக்கோளாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## உறவை சீர்குலைக்க ஊடகங்கள் முயற்சி



இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவுகளைச் சீர்குலைக்க இந்திய ஊடகங்கள் முயற்சிப்பதாக பாகிஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர், இந்தியாவை உளவு பார்ப்பது மற்றும் சென்னையில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாகவே பாகிஸ்தான் வெளிவிவகாரப் பணியகத்தின் பேச்சாளர் தஸ்னீம் அஸ்லம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருங்கிய உறவு நிலவி வருகிறது.

இந்நிலையில், இவ்விருநாடுகளுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த இந்திய ஊடகங்கள் முயற்சிக்கின்றன என்று மேலும் தெரிவித்துள்ளார். இதனிடையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாதம் பாகிஸ்தானுக்குப் பயணம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை தெரிந்ததே. (6)

# இந்தியா–இலங்கை ஒப்பந்தத்தை மீறும் அரசாங்க தரப்பினர்


இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கம் காலவரோதய சட்டமொன்றை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின சனத்தொகை பரம்பலில் மாற்றம் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் எனவும், இதில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிப்பது ஏற்றுக்கொளளக் கூடியதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சனத்தொகைப் பரம்பலை அடிப்படை



யாகக் கொண்டே இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஓராண்டு காலப்பகுதியில் காணி உரிமை தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு முடியாத நிலைமை ஏற்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள மக்கள் குறிப்பிட்ட ஓர் காலப்பகுதிக்குள் காணி உரிமை தொடர்பான ஆவணங்களைத் திரட்டி, சமர்ப்பிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரமாக அரசாங்கம் இந்த சட்டத்தை அமுல்படுத்துவதன் உள் நோக்கத்தை புரிந்துகொள்ள முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


வடக்கு கிழக்கில் காணி தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தை தாம் மதிப்பதாகவும், வடக்கில் ஆளில்லா இடங்களில் பௌத்த விஹாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதன மெய்யான நோக்கம் என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் வடக்கில் காணப்படும் இந்து கோயில்கள் கவனிப்பாரற்றிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## தேசியத்தலைவரே நாட்டுக்குத்தேவை

### ஞானசார தேரர்



அமைச்சர்களோ அல்லது எம்.பி.க்களோ இனிமேல் காவியுடை மீது கைவைக்க முற்படுவார்களாயின், அதுவே அரசாங்கத்தின் அழிவாகும். அரசாங்கத்திலிருந்து குரைக்கும் நாய்களைக் கட்டிப்போடுமாறு ஜனாதிபதியிடம் கோருகிறேன். இவ்வாறு பொது பல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இந்த நாட்டுக்கு தற்போது தேசியத் தலைவர் ஒருவரே தேவைப்படுகிறார். தவிர பொது வேட்பாளர் இல்லை. அதனால், அரசர்களை நியமிக்கும் வேலைத்திட்டமொன்றை பொது பல சேனா ஆரம்பித்துள்ளது என்றும் ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

பௌத்தம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய காலகட்டத்திலேயே நாங்கள் இப்போது இருககின்றோம். நாம் இதுவரை பொறுமை காத்தது போதும். வெளியிடங்களிலிருந்து வரும் அழுத்தங்கள், நாட்டை சூறையாடிக்கொண்டிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். எமது எந்தவொரு எதிர்ப்பார்ப்பும் இந்த அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை என்றார். (6)

# அரசிற்கு விரோதமாக செயற்படுகின்றனராம்



சில ஊடகங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக செயற்பட்டு வருவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக மக்களுக்கு எடுத்தியம்பும் போலிப் பிரசாரத்தில் சில ஞாயிறு பத்திரிகைகள் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களின் பின்னணியில் சில வங்குரோத்து அடைந்த எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் மத்திய வங்கியின் புள்ளி விபரங்களையும் திரிபுபடுத்தி வெளியிட முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணம் தொடர்பில் சில அரசியல்வாதிகள் சில ஊடகங்களும் பிழையான தகவல்களை வெளியிட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், இந்த சவால்களை வெற்றி கொண்டு ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை மீளக் கைப்பற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (6)

# சட்டத்தின் ஆட்சியை ஐ.நா.சபை மீறுகிறது

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்ளும் அதற்கு வெளியேயும் உள்ள சில அமைப்புகள் நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் அடிபபடையை மீறுவதாக ஜனாதிபது மஹிந்த ராஜபக்ஷகுற்றம் சாட்டியுளளார். கொழும்பில் இடம்பெற்ற சூழல் நீதி தொடர்பான தென்னாசிய பிரதம நீதியரசர்களின் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் தொடர்ச்சியும் சமமான தன்மையும் அவசியம். நீதிமன்றங்களும் சர்வதேச அமைப்புகளும் இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போதும் அர்த்தப்படுத்தும் போதும் இரட்டைவேடம் போடமுடியாது என்பதே இதன் அர்த்தமாகும் என தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அனைவருக்கும் ஒரே விதமாக அமுல்படுத்தப் பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினைச் சில நிறுவனங்களும், சில சர்வதேச நிறுவனங்களும் அடிப்படை நீதியை ஒரே விதமாக அமுல்படுத்துவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நீதி தொடர்பான மாநாட்டில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



நீடித்த அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலும் இந்த நிலைமையை காண முடிவதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஐந்து ஆண்டுகளில் நாட்டில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கியால் சுட்டார் அமைச்சர் கெஹலிய



அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தன்னை துப்பாக்கியால் சுட்டதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் விவாதத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த காலத்தில் கெஹலிய அப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தற்போது அவர் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள் வதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது கண்டி மாவட்டம் நாவலப்பிட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# கறுப்பு ஜூலை கலவரத்திற்கு பின்னர் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறினர்

## சந்திரசிறி கஜதீர சுட்டிக்காட்டு



1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை கலவரத்துடன் இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஐக்கியமின்மை காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாட்டைவிட்டு சென்றதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலவரோதய விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சொத்துக்கள் இழக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த சட்ட மூலத்தின் மூலம் சொத்துக்களை இழந்தவர்கள் தமது சொத்து உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளஞ்ஞீஞ்ஞீமுடியும்.

முன்னைய உரிமையாளர்களின் உறவினர்கள் பலவந்தமாக கைப்பற்றிய நிலங்களும் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் உரிமையாளர்கள் இல்லாத நிலங்களும் இருக்கின்றன. இவ்வாறான காணிகள் ஏனையோர் பலவந்தமாக குடியேற வாய்ப்புள்ளது.

அவ்வாறான நிலைமை ஏற்படுவதை தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அமைச்சர் கஜதீர மேலும் தெரிவித்துள்ளார்.(6)

# இலங்கையின் ஜனநாயகம் பற்றி எதற்காக கேள்வி எழுப்புகின்றனர்

வெளிநாட்டு அரச தலைவருக்கு சுதந்திரமாக பயணம் செய்ய பாதுகாப்பு வழங்க முடியாத நாட்டினர், இலங்கையின் ஜனநாயகம் பற்றி எதற்காக கேள்வி எழுப்புகின்றனர் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

கொழும்பு மருதானை பிரதேசத்தில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட கூட்டத்தை குழப்பிய சம்பவத்துடன் அரசாங்கத்திற்கு எந்த தொடர்பும் இல்லை.

இந்த பிரச்சினையை அடிப்படையாக கொண்டு எந்த நாடாவது இலங்கையின் ஜனநாயகம் பற்றி கேள்வி எழுப்புமாயின் அந்த நாடுகளின் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் தற்போது அங்கு செயற்படும் விதத்தை ஜனநாயக சுதந்திரம் என காட்ட அந்நாடு தயாராகி வருகின்றனவா என்று நாம் பதிலளிக்க வேண்டியேற்படும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி பிரிட்டனில் நடைபெற்று வரும் நிலையில் பாதுகாப்பு இன்மையை காரணம் காட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

பத்தாம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது. இதில் வயலின் உ.இராதாகிருஷ்ணன், திருமதி சைந்தவி நிஷாகரன் ஆயோரும் மிருதங்கம் வி.ரமணா ,தவில் ரி.உதய சங்கர்.தபேலா சதா வேல்மாறன் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

### இசைநிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியஆதரவில் பிரமகான சபையால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றுவருகின்றது.இன்றைய நிகழ்வாக திருமதி கவிதா வாமதேவ சர்மாவின் மாணவர்கள் வழங்கவுள்ள வாத்திய மெல்லிசை இடம்பெறவுள்ளது.

### இசைப்பேருரை


நல்லூாக் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கம்பராமாயண தெய்வீக தொடர் இசைப் பேருரை இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 6.30 தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லை குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி முத்தமிழருவி இசைக் கதாரத்தினம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்படவுள்ளது. இன்றைய தினம் ஸ்ரீராமாவதாரம் என்னும் தலைப்பிலான தெய்வீக தொடர் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

### சொற்பொழிவு

நல்லூரான் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனைச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வாக சைவப் புலவர் கா.கமலநாதன் வழங்கும் திருமுறையும் வாழ்வும் எனும் விடயத்திலான சொற்பொழிவும் சித்தன்கேணி சிவசக்தி அறநெறிப் பாடசாலை, மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, இளவாலை பாரதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மஞ்சத் திருவிழா



## மஞ்சத்தில் வருகின்ற மால் மருகன்

சஞ்சலங்கள் மலிந்து சந்தோசம் நலிந்து
சோகத்தைச் சோர்வுடன் சுமந்து
கஞ்சியுண்டு குடியிருந்த குடிசையையும் இழந்து
கவலையுடன்கண்ணீரில் நனைந்து
நெஞ்சத் துறுதியுடன் நம்பிக்கை தளராது
நல்லூரான் துணைநாடி வந்து
மஞ்சத்தில் வருகின்ற மால் மருகா நீயே
தஞ்சமென வேண்டுகின்றார் பணிந்து

க.அருமைநாயகம்(குளப்பிட்டி)

## வஞ்சி மாரிருவருடன் மாநகர் நல்லையில் மஞ்சம் ஏறிவருகிறான்

நாளும் தொழும் அடியார்கள்
நெஞ்சில் ஒரு கால் நினைத்திட
இருகாலும் தோன்றும் எழில்வடிவேலன்
வஞ்சிமாரிருவருடன் மாநகர்-நல்லையில்
மஞ்சம் ஏறி வருகின்றான்

ப.பாலசுப்பிரமணியம்(வேலணை பிரதேசசபை)

## நல்லையில் மஞ்சம் கண்டால்...

பஞ்சம் பசி துயரம் பாழும் பிணியகலும்
மஞ்ஞையில் ஏறுகின்ற மால் மருகன்-மஞ்சத்தில்
ஊரும் பெருநாளில் நல்லைத் திருப்பதியைச்
சேரும் அடியவர்க்கே காண்

சி.சிவபாலன் (கோண்டாவில் கிழக்கு)

## மஞ்சத்தில் வந்திடு-தமிழர் நெஞ்சத்து முருகா

ஈழத்தின் இறைவா நல்லூர்முருகா
ஈழமக்கள் துயர்துடைத்திடு மால் மருகா
தமிழர் தாயக பூமியில் தமிழினம் தளைத்திட
தமிழர் தலைவா தயவு காட்டிடு
இந்தியன் வந்ததும் உன்னிடம் தஞ்சம் புகுந்தோம்
இன்றும் உனையே சரணடைந்தோம்
சிந்திய குருதியை முள்ளி வாய்க்காலில் நீ மறந்தனையோ?
சீராக தமிழினம் வாழ மஞ்சத்தில் வந்தருள் செய்வாயே

இ.டினேஸ்சன்(கோண்டாவில்)

## மாநிலம் மகிமை பெற மஞ்சரதமேறி வருக

மாந்தர் துயர் நீங்கிடமாநிலம் மகிமை பெற
மாயவன் மருகா மஞ்சரத மேறி ·வருக
தர்மம் ஓங்கிட தானம் ஓங்கிட தமிழ் வேதம் ஒலித்திட
தமிழ்த் தெய்வமே மஞ்சரத மேறி வருக
நல்லைநகர் நாடி வந்தோர் குறைகள் நீங்கிட
நாதா ஷண்முக மஞ்சரத மேறி வருக
தமிழனுக்கோர் தீர்வு கிடைத்திட தாரணியெங்கும்
சாந்தி நிலவிட மஞ்சரத மேறி வருக

(க.லோகேஸ்வரன்(தொல்புரத்தூர்)

## நல்லைக் கந்தன் நனிவெண்பா


கல்லார்க்கும் கற்ற மாந்தர்க்கும் நடுநிற்கும்
நல்லைக் குமரனடி நாடுவமே-எல்லையிலாப்
பரம்பொருளாய் நின்றிந்தப் பார்சூழல வைப்பவனின்
தரமறிந்தோர் வாழ்வரே தாம்

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தலையில் மண்போட்ட பாதுகாப்பு அமைச்சு!

தமிழ் நாட்டில் தணிந்து போய்க்கிடந்த இலங்கை அரசுக்கு எதிரான உணர்வலைகள், இப்போது மீண்டும் கொதி நிலைக்கு வந்திருக்கின்றன. இதற்கு, இலங்கைத் தமிழர் பிரச்சினையோ அல்லது தமிழ்நாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களோ காரணமல்ல. இலங்கை பாதுகாப்பு அமைச்சே இந்தபிரச்சினையை உருவாக்கிவிட்டது. எங்கோ சிறகடித்துப் பறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்திய- இலங்கை உறவுகளுக்கு கடிவாளம் போட்டு அடக்கிவிடும் சூழலை பாதுகாப்பு அமைச்சே ஏற்படுத்திவிட்டது. ஒரு வகையில்சொல்லப்போனால் இதனை யானை தன் தலையில் மண்ணை வாரியதுபோல



என்று கூறலாம். ஏனென்றால், புது டெல்லியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமைந்த நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசாங்கம், கொழும்புக்குச் சாதகமான உற்சாகத்தை ஏற்படுத்தத்தக்க சில நகர்வுகளை மேற்கொண்ட நிலையில், அதையெல்லாம் தலை குப்புறக் கவிழ்த்துப் போட்டுவிட்டுள்ளது பாதுகாப்பு அமைச்சு. சேனாலிவதுகே என்ற பெண் கட்டுரையாளரின் கட்டுரை ஒன்றுதான் பாதுகாப்பு அமைச்சையும் இலங்கை அரசாங்கத்தையும் இந்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. மீனவர்கள் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதங்களை கேவலப்படுத்தும் வகையில் நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா எழுதும் காதல் கடிதங்கள் எந்த அளவுக்கு அர்த்தமுள்ளவை? என்ற தலைப்பில் அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

அதனுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட்ட ஒரு புகைப்படமும் இந்தியப் பிரதமருக்கு தமிழக முதல்வர் காதல் கடிதம் எழுதுவதுபோன்று சித்திரிக்கப்பட்டிருந்தது. உண்மையில் அந்தப் படத்தை சித்திரித்தவரோ கட்டுரையை எழுதியவரோ நிலைமை இந்தளவுக்கு மோசமடையும் என்று நினைத்திருக்கமாட்டார். ஏன் பாதுகாப்பு அமைச்சுகூட இந்தளவுக்கு நிலைமை மோசமடையும் என்றோ சர்ச்சையை உருவாக்கும் என்றோ கருதியிருக்கவில்லை.

அவ்வாறு நினைத்திருந்தால் அந்தக் கட்டுரை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்குமோ என்பது சந்தேகம்தான். கட்டுரையும் படமும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தின் முகப்புப் பூக்கத்தில் பிரதான அம்சமாக வெளியிடப்பட்ட உடனேயே அது சர்ச்சையை கிளப்பிவிட்டது. ஒரு அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரபூர்வமான இணையத்தளம் இன்னொரு நாட்டின் பிரதமரையும் ஒரு மாநில முதல்வரையும் இணைத்து இப்படியானதொரு கட்டுரையையும் படத்தையும் வெளியிட்டதென்பது மோசமான முன்னுதாரணமே.

இதனை தவறு என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால்தான் பாதுகாப்பு அமைச்சு நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரியது. இன்னொரு நாட்டின் உயர் நிலைத் தலைவர்களையோ சர்வதேசப் பிரமுகர்களையோ புலி என்று பட்டம் கட்டிப் பழகிப் போனதால்தான் அரசாங்க இணையத்தளம் ஒன்றினால் இந்தியப் பிரதமரையும் தமிழ்நாடு முதல்வரையும் இவ்வாறு கேவலமாக சித்திரிக்க முடிந்தது.

இதனை தெரியாமல் செய்த தவறு என்று பாதுகாப்பு அமைச்சோ இலங்கை அரசாங்கமோ நியாயப்படுத்த முடியாது. இத்தகையதொரு செயலுக்கான ஊக்கியாக இந்திய அரசாங்கம் அல்லது அதனைச் சார்ந்துள்ளவர்களும் இருந்துள்ளனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்திருப்பதைப் புறக்கணிக்க முடியாதுள்ளது. அண்மையில் கொழும்புக்கு வந்த சுப்பிரமணியன் சுவாமி தலைமையிலான பா.ஜ.க.வின் கொள்கை வகுப்பு குழுவினர் தெரிவித்த சில கருத்துக்கள் இலங்கை அரசுக்கு அதிகளவு தெம்பைக் கொடுத்தது என்பதில் சந்தேகமில்லை. அதாவது, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையை புதுடெல்லியே தீர்மானிக்கும் என்றும் அதனை தமிழ்நாடு, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களால் தீர்மானிக்க முடியாது என்றும் பா.ஜ.கவின் கொள்கை வகுப்பு ஆலோசகரான கலாநிதி சேஷாத்ரி சாரி தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில் தமிழ்நாட்டின் அழுத்தங்களால் புதுடெல்லி எடுத்த முடிபுகள் கொழும்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தன. இலங்கை அரசாங்கம் போரை முன்னெடுத்த போதும் அதற்குப் பின்னரும் தமிழ்நாட்டின் கடுமையான எதிர்ப்புக்கள், விமர்சனங்கள், அழுத்தங்களைச் சந்திக்க நேரிட்டது. அது பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கின. அல்லது குழப்பியடித்தன.

தி.மு.க ஆட்சிக்காலத்திலும் அ.தி.மு.க ஆட்சிக்காலத்திலும் இவை இடம்பெற்றன. தி.மு.க ஆட்சியை இழந்த பின்னரும் மன்மோகன் சிங் அரசாங்கத்தில் கொண்டிருந்த செல்வாக்கை வைத்து பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தது. அல்லது இலங்கை அரசுக்குச் சார்பான முடிபுகளை எடுக்கவிடாமல் புதுடெல்லியைத் தடுத்துநிறுத்தியது. இவையெல்லாம் இலங்கை அரசாங்கத்துக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தின என்பதில் சந்தேகமில்லை.

அதுமட்டுமன்றி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பை நடத்தக்கோரியும் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை நடத்த வலியுறுத்தியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இலங்கை அரசாங்கத்தை எரிச்சல் கொள்ள வைத்திருந்தன. இந்த நிலையில் புதுடெல்லியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் தமக்குச் சாதகமாக மாறும் என்று நம்பியிருந்தது இலங்கை அரசாங்கம்.

அதுபோலவே, பல சம்பவங்களும் நடந்தன. கருத்துக்களும் வெளியாகின. அதாவது, இலங்கையுடனான இந்தியாவின் உறவுக்குள் தமிழ்நாட்டின் தலையீட்டுக்கு இடமளிக்கக் கூடாது என்ற கருத்து புதுடெல்லி ஆட்சியாளர்களின் மீது திணிக்கப்பட்டது. குறிப்பாக சுப்பிரமணியன் சுவாமி போன்றவர்கள் அத்தகைய நிலையை வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் கொழும்பு வந்திருந்த சுப்பிரமணியன் சுவாமி, இந்திய- இலங்கை உறவுகளிலிருந்து தமிழ்நாட்டையும் தமிழர் பிரச்சினையையும் துண்டித்துவிட வேண்டும் என்று வெளிப்படையாகவே கூறியிருந்தார். அவரது இதுபோன்ற கருத்துக்களும் கொழும்புக்குப் புதுடெல்லி காண்பித்த சமிக்ஞைகளும் தமிழ்நாட்டில் வெறுப்புணர்வையே தோற்றுவித்திருந்தது. இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாக நடந்துகொள்ள புதுடெல்லி துணிந்துவிட்டதான கருத்தை அது தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருந்தது. ஆனால், புதுடெல்லியில் அமைந்த நரேந்திரமோடி அரசாங்கத்துடன் உறவைப் பேண விரும்பிய தமிழக அரசு இலங்கைத் தமிழர் விவகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு மத்திய அரசுடன் முட்டி மோத விரும்பவில்லை. கடந்த அரசாங்கத்துடன் கடைப்பிடித்த முரண்போக்கினால் ஏற்பட்ட பாதிப்புகளைக் கருத்திக் கொண்டு தமிழ்நாட்டின் நலன்கருதி பொறுமை காத்தது. இந்தச் சூழலில்தான் இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாக புதுடெல்லியில் ஏற்பட்டு வந்த மாற்றத்தைப் புரட்டிப் போட்டுள்ளது பாதுகாப்பு அமைச்சு.

எங்கே ஒருசிறு துரும்பு கிடைக்கும் என்று காத்திருந்த தமிழ்நாட்டுக்கு கிடைத்தது அரிய வாய்ப்பு. பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் கட்டுரை வெளியிடப்பட்ட விவகாரத்தை வைத்து ஒரு பெரிய அரசியல் நகர்வையே நடத்தி முடித்திருக்கிறது தமிழ்நாடு. இதில் ஆச்சரியமான ஒரு விடயம் உள்ளது. எல்லா விடயங்களுக்கும் முரண்பட்டுக் கொள்ளும் தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் ஒரே அணியில் திரள வைத்துவிட்டது பாதுகாப்பு அமைச்சு. கீரியும் பாம்புமாக செயற்பட்டு வந்தபோதும் ஜெயலலிதாவுக்காக கருணாநிதி குரல் கொடுத்த அதிசயமும் நிகழந்தது. இந்த ஒன்றுபட்ட உணர்வை அண்மைய தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் காண முடியாத நிலை இருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் புண்ணியத்தினால் இப்போது புதுடெல்லிக்கு இன்னொரு சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது. அதாவது கட்சி பேதமின்றி தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கிறது என்பதே அது. அதனால்தான் அ.தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் அழுத்தம் கொடுத்தவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் அதனைக் கண்டித்தார். இலங்கைத் தூதுவரை அழைத்து எதிரப்பைத் தெரிவிப்பதாக உறுதியளித்தார். அவர் கூறியதுபோலவே கடந்த திங்கட்கிழமை மாலை இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்ட புதுடெல்லிக்கான இலங்கைத் தூதுவர் சுதர்சன் செனிவிரத்னவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர்களில் ஒருவரான சுசித்ரா துரை இந்தியாவின் கண்டனத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிருப்தியையும் வெளிப்படுத்தினார்.

இந்த விவகாரத்தில் புதுடெல்லிக்கும்கூட ஒரு பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தக்கட்டுரை வெளியானதும் அது தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பேயாகும். ஆனால் இந்திய மத்திய அரசாங்கம் அவ்வாறு செய்திருக்கவில்லை. தமிழ்நாட்டிலிருந்து அ.தி.மு.க. தரப்பில் கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்தே கொழும்பிலிருந்த இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, வெளிவிவகாரச் செயலாளர் சேனுகா செனிவிரத்னவை சந்தித்து அதிருப்தியைத் தெரிவித்தார். அதன் பின்னரே பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரப்பட்டது.

அதற்கு முன்னரே இந்த விவகாரம் தமிழ்நாட்டில் சர்ச்சையைக் கிளப்பத்தொடங்கியதுமே பாதுகாப்பு அமைச்சு கட்டுரையை சத்தமில்லாமல் நீக்கியிருந்தது. அதுபோலவே புதுடெல்லியிலுள்ள இலங்கைத் தூதரை அழைத்துக் கண்டனம் வெளியிட்ட விவகாரத்திலும் மத்திய அரசே முடிவெடுத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறுசெய்யவில்லை. அதன் விளைவு என்னாயிற்று என்றால் தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு மீண்டும் மத்திய அரசு பணிய வேண்டிய நிலைமையை உருவாக்கியது. இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாநிலங்கள் தலையிட முடியாது என்று கூறிய மத்திய அரசே ஒருமாநிலத்தின் அழுத்தங்களை அடுத்து இன்னொரு நாட்டின் தூதுவரை அழைத்துக் கண்டித்தது.

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட இந்தக் கட்டுரை, இந்திய மத்திய அரசாங்கத்தையும் கூடத் திக்குமுக்காட வைத்துவிட்டது என்பதே உண்மை. இந்திய மத்திய அரசாங்கம் கொழும்புடன் கடைப்பிடிக்க எண்ணிய சகிப்புத்தன்மை அல்லது மென்போக்குத்தான் தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு அது உள்ளாக நேரிட்டதற்கான காரணம். அதேவேளை இனிமேல் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் தலையிடும் உரிமையில்லை என்று பா.ஜ.கவின் கொள்கை வகுப்பாளர்கள் தம்பட்டம் அடித்தபோது தமிழ்நாடு பொறுமை காத்திருந்தது. அது ஒருவகையில் தமிழ்நாட்டுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது என்பதே உண்மை. ஆனால், இவ்வளவு விரைவாக அதற்கு ஒரு பதிலடி கொடுக்கும் நிலை வரும் என்றோ மத்திய அரசாங்கத்தை தம்மை நோக்கி வளைக்க முடியும் என்றோ தமிழ்நாடு அரசோ அல்லது அங்குள்ள கட்சிகளோ எதிர்பார்த்திருக்காது.

அதேவேளைஇந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது அதனை அரசியல் சாயம் பூசி வீணடிக்க விடாமல் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் தமிழ்நாடு இனித் தலையிட முடியாது என்று கொண்டாடிய இலங்கை அரசாங்கத்துக்கு மத்திய, மாநில உறவுகளுக்குள் புகுந்து அதனைக் குழப்புவதற்கு என்ன உரிமை உள்ளது என்ற தமிழ்நாட்டின் கேள்வி, இந்திய மத்திய அரசை திக்குமுக்காட வைத்துவிட்டது என்பதே உண்மை. இலங்கை அரசாங்கத்துடன் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதற்காக தமிழ்நாட்டின் கருத்துக்களையும் அழுத்தங்களையும் புறக்கணிக்கத் துணிந்த இந்திய மத்திய அரசுக்கு தாம் செல்லும் பாதை சரியானதா என்று மீளாய்வு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இந்த விவகாரம் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் இலங்கை விவகாரத்தையும் அதுபற்றிய தமிழ்நாட்டின் உணவுர்களையும் புதுடில்லி நிதானமாக கையாள முற்படலாம். அதேவேளை இலங்கை அரசாங்கம் புதுடில்லியின் உணர்வுகளுக்கு மட்டு மன்றி தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டிய கட்டாயம். அதனை உதறித்தள்ளிவிட்டு இலங்கையுடன் கைகுலுக்கிக்கொள்ளலாம் என்று எதிர் பார்த்தால் அதன் விளைவு இதுபோன்ற மூக்குடைபடுதலில்தான் போய் முடியும்.

ஏனென்றால் தமிழ்நாட்டின் மீதான பா.ஜ.கவின் கரிசனை தேர்தலுடன் முடிந்து போகவில்லை. தமிழ்நாடுமற்றும்கேரளாவில்பா.ஜ.கவை வளர்த்தெடுப்பதே நரேந்திரமோடியின் அடுத்த இலக்கு. அதற்காக பா.ஜ.கவின் தேசியத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தனது நண்பர் அமீத் ஷாவுடன் தமிழ்நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். பா.ஜ.க. தன்னைத் தமிழ்நாட்டில் வளர்த்துக்கொள்ள ஆசைப்பட்டால் தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு நிச்சயம் கட்டுப்பட்டேயாக வேண்டும். இந்த உண்மையைத் தமிழ்நாட்டுப் பயணத்திற்கு முன்னதாக நரேந்திரமோடிக்கு உணர வைத்த பெருமை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சையே சாரும். *-கே சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 ஆம் ஆண்டு காணாமற் போன மகன் இன்றுவரை வீடு திரும்பவில்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு முன் தாய் கதறல்

மன்னாருக்கு கடல் வழியாக மீன்பிடிக்கச் சென்ற எனது மகன் இன்றுவரை வீடு திரும்பவில்லை என மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது தாயொருவர் சாட்சியமளித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தலைமையில் மனோ ராமநாதன், எஸ்.வித்தியாரத்தின ஆகியோர் முன்னிலையில், காணாமற் போனவர்களின் உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

இதன்போது, கடலுக்குச் சென்று காணாமற்போன தனது மகன் தொடர்பில் சாட்சியமளித்த விடத்தல்தீவைச் சேர்ந்த டோமினிக் செல்வராணி என்ற தாய் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் கடற்பரப்பிலிருந்து எனது மகன் உட்பட ஐந்து பேர் கடந்த 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி, மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். அவ்வாறு சென்றவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து கூடச் சென்றவர்களிடம் விசாரித்த போது கடலில் வைத்து மகனை கடற்படையினர் அழைத்துச் சென்றதாக தெரிவித்தனர்.

தலைமன்னார் கடற்படையினரே இவர்களை அழைத்துச் சென்றதாக தலைமன்னார் பகுதி மக்கள் எங்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தலைமன்னார் கடற்படையினரிடம் விசாரித்த போது அவர்கள் குறித்த சம்பவம் பற்றி தமக்குத் தெரியாது என்று தெரிவித்தனர்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு பின் இடம்பெயர்ந்து சென்றபோது தலைமன்னார் கடற்படையினரின் முகாமில் எனது மகன் இருந்ததை கண்டவர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக ஐ.சி.ஆர்.சி யில் நாங்கள் முறைப்பாடு செய்த போது மகனை தேடிக்கண்டுபிடித்து தருவதாக எங்களுக்கு தெரிவித்தனர். இருப்பினும், இதுவரை மகனுக்கு என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது.

குறிப்பிட்ட காலத்தில் தலைமன்னார் கடற்படையினருடன் தொடர்புகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டது. சுமார் இரண்டு மாதங்கள் மட்டுமே மகனை தேடக்கூடிய நிலைமை எமக்கு அப்போது இருந்தது.எங்கள் வீட்டிலிருந்து கடற்கரைக்கு 10 நிமிடத்தில் நடந்து செல்ல முடியும். அப்பொழுது இக்கடற்கரைப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இப்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.



2007ஆம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது நாங்கள் தேவன்பிட்டி என்ற பகுதிக்கு அகதிகளாக சென்றோம். நாங்கள் இடம்பெயரும் போது எங்களை எவரும் தடுக்கவில்லை. உயிரை பாதுகாப்பதற்காகவே சென்றோம். அந்த நேரத்தில் இரு தரப்பினரும் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாலேயே எமது உயிரை பாதுகாக்க எமது இடத்தில் இருந்து இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

2010ஆம் ஆண்டு நாங்கள் திரும்பி எமது விடத்தல்தீவு பகுதிக்கு மீண்டும் வந்த போது நாங்கள் தொழில் செய்யும் மீன் வாடியை இராணுவம் கையகப்படுத்தியிருந்தது. இப்பொழுதும் அது இராணுவத்தினர் வசமே உள்ளது.

2010.12.04 ஆம் திகதி நாங்கள் எங்களது வீட்டிற்கு வந்தபோது வீடு மட்டும் இருந்தது. பொருட்கள் எவையும் இருக்கவில்லை. அரசு எமக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. யூ.என்.எச்.சி.ஆர் மட்டும் 25 ஆயிரம் ரூபாய் தந்துதவியது. வேறு யாரும் உதவி செய்யவில்லை. நாங்கள் கடன்பட்டு எங்கள் வீட்டை திருத்தி வாழ்ந்து வருகின்றோம்.

எனது கணவருக்கு இப்போது 61 வயதாகிறது. எனது மகனையும் காணவில்லை. எங்கள் வருமானமும் குடும்பத்திற்கு போதாமல் இருப்பதுடன் எங்கள் சொந்த மீன் வாடியையும் இராணுவம் தங்கள் வசம் வைத்திருப்பதால் நாங்கள் பிறருடைய மீன்வாடியையே குத்தகைக்கு பெற்று எங்கள் தொழிலை மேற்கொண்டு வருகின்றோம்.

இராணுவம் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் கொடுப்பதில்லை. ஆனால் நாங்கள் தொழில் மேற்கொள்ளும் எமது வாடியை தராமல் இருப்பது கவலையை தருகின்றது. மகன் காணாமற் போன போது கடற்பகுதியை கடற்படையினர் கண்காணித்தார்களா? என்பது எமக்குத் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# வெளிவிவகார அமைச்சானது மக்களை தவறாக நடத்துகிறது

## சட்டத்தரணிகள் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு மருதானையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு பொதுமக்களை தவறாக வழிநடத்தப்பார்ப்பதாக ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான வெலியமுன தெரிவித்துள்ளதாவது,

காணமற்போனவர்களின் உறவினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் குழப்பம் விளைவித்த பௌத்த பிக்குகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏதாவது நேரடி தொடர்புள்ளதா என்ற சந்தேகம் இருக்குமானால் அந்த சந்தேகம் வெளிவிவகார அமைச்சின் அறிக்கை மூலமாக தெளிவாகியுள்ளது. அத்துமீறி உள்ளே நுழைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களை அந்த அறிக்கையில் அமைதியான முறையில் செயற்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் காணமற்போனவர்கள், கொல்லப்பட்டவர்களின் பெற்றோர் முன்னணி என்ற முன்னணியே அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான அமைப்பொன்று அதுவரை செயற்பட்டதில்லை, திடீரென முளைத்த அவ்வாறான வலுவான அமைப்பிற்கு வெளிவிவகார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் அவர்கள் தங்கள் துயரங்களை முன்வைப்பதற்கு வாய்ப்பொன்றையே கோரியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மாறாக அவர்கள் அந்த கூட்டத்தை குழப்பவே முனைந்தனர் என சுட்டிக்காட்டியுள்ளனர். (6)

# வாரம் ஒரு தகவல்

## சத்தமில்லாத யுத்தம்

சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?

"அரசியல்வாதியானதற்குப்பின் அவர் எங்கே வீட்டில் தங்கிறார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண்டிருக்கிறாரோ...?"

"பேசட்டும் பரவாயில்லை.ஆனால் சத்தம் போட்டுப் பேசச் சொல்லாதே"

"ஏன்?"

"சத்தம் போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப்படுவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்"

"அப்படியா?"

"ஆமாம்.16 விதமான நோய்கள் குரல்வளையைப் பாதிக்கிறதாம்.முக்கியமாக பாதிப்புக்குள்ளாகிறவர்கள் யார் தெரியுமா?"

"யார்?"

"ஆசிரியர்கள் ,பாடகர்கள், அரசியல்வாதிகள்"

"அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தினாலும் பாடினாலும் பேசினாலும் அதிக சத்தம் போடாமல் இருப்பது நல்லது என்கிறாயா?"

"ஆமாம்,அதனால்தான் எனது வீட்டுக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கின்றேன்?"

" என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்?"

"என்னை திட்டுவது என்றால் கூட மெதுவாகத் திட்டுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்"

"உங்களுக்குள் சண்டை வருமா?"

" என்ன அப்படிக்கேட்டு விட்டாய்?தினமும் சண்டை சச்சரவுதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்குக் கூட கேட்காது"

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"இருந்தாலும் அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன்"

"அப்படியா?"

" ஆமாம்.போடவேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது".


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 மணிநேர போர்நிறுத்தம் முறிந்தது; இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஹமாஸ்

# பொழிந்தது

## பதிலுக்கு வான் தாக்குதலில் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

காஸாவில் அமுல்படுத்தப்பட்டிருந்த 72 மணி நேர யுத்த நிறுத்தம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை முடிவடைந்ததையடுத்து பலஸ்தீன ஹமாஸ் போராளிகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காஸா பிராந்தியத்திலான வான் தாக்குதல்களை மீள ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய தாக்குதலில் 10 வயது சிறுவன் ஒருவன் உயிரிழுந்துள்ளான். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை காலை வரை அமுல்படுத்தப்பட்டிருந்த 72 மணி நேர யுத்த நிறுத்தத்தை நீடிக்கத் தயாராகவுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்திருந்த போதும், ஹமாஸ் போராளிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் யுத்த நிறுத்தம் சாத்தியமில்லை என அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் நிறைவு பெற்றதையடுத்து ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீதான ஏவுகணைத் தாக்குதல்களை ஆரம்பித்திருந்தனர். காஸாவில் கடந்த 4 வாரங்களாக இடம்பெற்று வரும் மோதல்களில் சுமார் ஆயிரத்து 940 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் குறைந்தது ஆயிரத்து 890 பலஸ்தீனர்கள் உள்ளடங்குகின்றனர். பலஸ்தீனர்கள் தரப்பில் பலியானவர்களில் அநேகர் பொது மக்கள் என ஐக்கிய நாடுகள் தரவுகள் கூறுகின்றன.

அதேசமயம் இஸ்ரேலிய தரப்பில் 64 படைவீரர்கள், இரு இஸ்ரேலிய பொதுமக்கள், இஸ்ரேலில் வசித்த தாய்லாந்து பிரஜை ஒருவர் உட்பட 67 பேர் உயிரிழந்துள்ளனர்.

புதிய ஏவுகணைத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக காஸா பிராந்தியத்திலுள்ள தீவிரவாதிகளின் தளங்களை இலக்கு வைத்து வான் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலிய பாதுகாப்புப்படை நேற்று முன்தினம் தெரிவித்தது. எகிப்திய மத்தியஸ்தத்துடன் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரிவுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்ற நிலையிலேயே இந்த வன்முறை தாக்குதல்கள் மீள ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஸா பகுதி மீது கடந்த ஒரு மாத காலமாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் சுமார் ஆயிரத்து 900 பாலஸ்தீனியர்களும், 67 இஸ்ரேலியர்களும் பலியாகியுள்ள நிலையில் மனித நேய அடிப்படையில் 72 மணி நேரத்திற்கு போர் நிறுத்தம் செய்ய இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த 5 ஆம் திகதி தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி, அதிகாலை 8 மணி முதல் 72 மணி நேரங்களுக்கு இந்த போர் நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த தற்காலிக போர் நிறுத்தத்துக்கான காலக்கெடு உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் முடிவடைந்ததால் இஸ்ரேல் மீது முதலில் ஹமாஸ் படையினர் ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடி தரும் வகையில் காஸா பகுதியின் மீது 51 முறை பறந்த இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 10 வயது சிறுவன் உட்பட 6 பேர் பலியாகினர். 31 பேர் படுகாயமடைந்தனர்.

இதுவரை இஸ்ரேலின் தாக்குதலில் பலியான ஆயிரத்து 900 பேரில் 429 அப்பாவி குழந்தைகள் மற்றும் ஆயிரத்து 354 பேர் பெண்கள் உள்ளிட்ட சாதாரண பொது மக்கள் என்று ஐ.நா.சபை கணக்கிட்டுள்ளது. (6)

### ஒபாமாவின் உத்தரவையடுத்து

# ஈராக் போராளிகள் மீது விமானங்கள் குண்டு மழை



ஈராக்கில் போராளிகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீச்சுக்கு நட்பு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈராக்கில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' போராளிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். மொசூல், கிர்குக் உள்ளிட்ட 15 நகரங்களை கைப்பற்றியுள்ளனர். தன்னாட்சி அதிகாரம் படைத்த குர்தீஷ்தானில் தாக்குதல் நடத்தி அங்கும் பெரும்பாலான பகுதிகளை பிடித்தனர்.

அங்கு வாழும் 'யாஷிடி' என்ற பூர்வீக குடிமக்களை வெளியேற உத்தரவிட்டனர். இதனால் அச்சம் அடைந்த சுமார் 40 ஆயிரம் பேர் சிஞ்சர் மலையில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அங்கு உணவு மற்றும் தண்ணீர் இன்றி தவிக்கும் அவர்களுக்கு உதவ அமெரிக்கா முன்வந்தது. இதற்கிடையே குர்தீஷ்தான் தலைநகர் எர்பில் நோக்கி முன்னேறும் போராளிகளை தடுக்கும்படி ஈராக் மற்றும் குர்தீஷ்தான் மாகாண அரசுகள் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்தன.

எனவே, 'யாஷிடி' பூர்வீக குடி மக்களுக்கு உணவு, தண்ணீர் வழங்கவும், எர்பில் நகரில் இருந்தபடி போராளிகள் மீது தாக்குதல் நடத்தவும் அமெரிக்க இராணுவத்துக்கு ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டார்.

இதை தொடர்ந்து பூர்வீக குடி மக்களுக்கு உணவு, தண்ணீரை விமானங்கள் மூலம் அமெரிக்கா வீசியது. இதற்கிடையே எர்பில் நகரில் குர்தீஷ் படைகள் மீது போராளிகள் பீரங்கி தாக்குதல் நடத்திய சில மணி நேரத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் பதிலுக்கு வான் வழி தாக்குதலில் ஈடுபட்டன.

அமெரிக்காவின் 'எப்.ஏ. 18' போர் விமானங்கள் எர்பில் அருகே போராளிகள் நிலைகள் மீது சுமார் 225 கிலோ எடை கொண்ட (லேசர் வழிகாட்டும்) இராட்சத குண்டுகளை வீசின.

இத்தகவலை அமெரிக்க இராணுவத்தலைமை செயலகமான பென்டகன் செய்தித் தொடர்பாளர் நியூர் அட்மிரல் ஜான்கிரபை ருவிட்டரில் வெளியிட்டுள்ளார். (6)

# வைரஸை கட்டுப்படுத்த அவசரநிலை பிரகடனம்

### ஐ.நா.நடவடிக்கை



மேற்கு ஆப்பிரிக்க நாடான கினியாவில், இந்த ஆண்டு தொடக்கத்தில், 'எபோலோ' வைரஸ் கிருமி தாக்குதல் காரணமாக 'எபோலோ' தொற்று நோய் தாக்கியது. அப்போதிருந்து அண்டை நாடுகளிலும் பரவி, இதுவரை 932 பேரை பலி கொண்டுள்ளது. மேலும், ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எபோலோ நோய், மேற்கு ஆபிரிக்காவை தாண்டி பரவுவது தவிர்க்க முடியாதது என்று அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், ஐ.நா. அமைப்பான உலக சுகாதார நிறுவனத்தின் அவசரநிலை குழு கூட்டம், ஜெனீவாவில் 2 நாட்களாக நடைபெற்றது.


அதன் முடிவில் எபோலோ நோயை கட்டுப்படுத்த, உலகளாவிய அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. இதுகுறித்து உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் மார்கரெட் சான் கூறியதாவது.

எபோலோ நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து விமானத்தில் வரும் அனைத்து பயணிகளையும் பரிசோதிக்க வேண்டும். விமான நிறுவனங்கள், அந்நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு விமானங்களை இயக்கும்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உலகம் முழுவதும் உள்ள நாடுகளும், விமான நிலையங்களும் அந்நோயை கண்டறிந்து தடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஏனைய நாடுகள் உதவ முன வர வேண்டும். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## முடிவின்றி

குப்பைகளை கூட்டியள்ளி
கூட்டாக வேலைசெய்து
களைக்கும் இரண்டு கையும்
இரண்டு காலும்
இரவுத் தூக்கத்தை
விலைக்கு வாங்கிவிடும்
அவள் வேதனை
அவளுடன்தான்...
என்றும் தொடரும் வேலை
தீராது என்றும் தொல்லை
கொடுப்பாளே எஜமானி
சம்பளம்
வீட்டில் இருப்பாரே
குடிகாரத்தந்தை
முழுதும் பறித்து
குடித்து முடித்துக் கிடப்பார்
ஒளித்துவை என்று
அவள் மனம்
மறுநாள்
குடிக்கும் மூக்கிற்கு
தெரியாமலா போகும்
அவள் மீண்டும்
தொடர்ந்தாள்...
தொடர்ந்தாள்...
முடிவின்றி
இரண்டு பிள்ளைகளின்
வயிறும் காய்ந்தது
அவன் வயிறு
குடித்து குடித்து நிறைந்தது

**பு.பிரசாந்**
**அல்லைப்பிட்டி**

## புழுதியில் புதைந்த பெருமூச்சு

சாம்பலாகிப்போன ரோம் நகர் போல
தீப்பிடித்து எரிகிறது காஸா
இதையும்கூட
முள்ளிவாய்க்கால் போல
கண்டும் காணாமல் போவாயோ
எல்லோருக்கும் பொதுவான ஈசா
காலாதிகாலமாக பாலஸ்தீனர்
ஆண்டவர் பூமி இப்போது
மாண்டவர் பூமியாக மாறியிருக்கிறது
தொழுகைச் சத்தம் கேட்ட பூமியிலே
இப்போது அழுகைச் சத்தமே
எதிரொலிக்கிறது
ஒவ்வொருவரையும்
துளைத்து துளைத்து விசாரிக்கிறார்கள்
வினாக்களால் அல்ல
துப்பாக்கிச் சன்னங்களால்
அவர்களோ உங்கள் வீடுகளையெல்லாம்
இடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்
கல்லாக நீங்களோ அதையெடுத்து
இடித்தவர் மீதே வீசிவிட்டு
வாழும் வழிமுறையை
உருவாக்கிக்கொண்டுதான் இருக்கிறீர்கள்
தில்லாக
கையிலே எடுக்கும் கல் கூட
யாரையும் கொல்வதற்காகவல்ல
தங்களது கோரிக்கையை சொல்வதற்காகவும்
வெல்வதற்காகவுமேயாகும்

**மட்டுவில் ஞானக்குமரன்**

## நிமிர்ந்து செல்

நிமிர்ந்து நீ நடந்தால் தான்
நிழல்கூட உன் பின்னே வரும்
மண்டியிட்டு நீ போனால்
தோல்வி உன் தோளைப் பற்றும்
அச்சம் கொண்டு நீ வாழ்ந்தால்
மரணம் மடியில் பள்ளிகொள்ளும்
துச்சமாய் எண்ணி துணிந்து நில்
மரணம் உனக்கு அஞ்சும்
உணர்வுகள் உனது உடைமை
அதை நிதானமாய் கையாள்வதே
உனது கடமை
அதனை அடக்க நினைப்பதோ
சுய அடிமை
பிறரை மிஞ்சி வாழ்
பிறரிடம் கெஞ்சி வாழாதே
அது மடமை
இன்பமும் துன்பமும் வாழ்வின்
இருபக்கங்கள்
இன்பத்தைச் சேர்த்துக்கொள்
துன்பத்தைக் கற்றுக்கொள்
உன் கையில் உள்ள
வாழ்க்கை என்ற பாத்திரத்தில்
அமுதா விசமா என்பதும்
உனது கையில்

**அ.அஜந்தன், கந்தர்மடம்**

## இமயம் தொட...

விடிவுதனை நினைத்து
இருட்டில் கிடப்பதிலும்
சூரியனைத்தேடிய
பயணம் மேலானது
கடிது என விடுவதிலும்
முடியுமென முன்னேறு
சடுதியென உன் காலடியில்
வெற்றிக்கனியை
யாரும் கொட்டிவிடார்
முன்னேறு, முன் நீ ஏறு

மாவை.நா. கஜேந்திரன்

## விடியுமா?

துயரின் ஈரம் காயா மனங்களில்
இன்னமும் மழையின் நினைவுகள்
மீண்டும் சூழும் கருமேகத்
திரைகளில் தொங்கியபடி
எம்வாழ்வின் மன இருள்
விடிவெள்ளி தொலைந்த
வானத்தில் நட்சத்திர
மின்மினிகளின் சிமிட்டல்கள்
விடியுமா
தூரப்பார்த்தபடி
எம் விழிகள்

**புலோலியூர் வேல்நந்தன்**

# மௌனத்தின் தேடல் – 216



## வாழ்வில் விடிவு வருமா?

குடும்பம் வறுமையில் வாழனும்
சிறுவர் என்பதால் வேலையுமில்லை
உழைக்கும் வயது வரை
அரசின் உதவியும் இல்லை
அனைவர்க்கும் கல்வியாம்
புத்தகம் சுமக்க தெம்புமில்லை
வேலையிலும் புறக்கணிப்பு
சட்டங்களால் கட்டுப்பாடுகள்தான்
தேவைக்கேற்ற மனிதநேயம் இல்லை
அடி தடி சண்டை வம்பு
கோஷ்டியாய் திரியலாச்சு
விளையாடி காலம் போகும்
நாளை விடியலும் இல்லை வாழ்வில்

ம.திருவரசுராசா
வவுனியா

## தோழர்களே

உயர்வு தாழ்வு பாராமல்
தோள்மீது கைபோடும்
தோழனின் அன்பு
வீழாமல் சக்கரம்
உருள்வது போலே
வாழ்நாள் முழுவதும்
வாழ்வதே நட்பின் சிறப்பு

க.அபர்ணா, வட்டுக்கோட்டை

## வாழ்வின் ஒளி

பழைமையின் நினைவுகளாய்– அல்ல
புதுமை தேடும் புதல்வர்காய்...
மகிழ்ச்சியின் வழி செல்வோரே– உம்
வாழ்க்கையின் ஒளி அண்மையிலே...!

பி.வேதிகா
வ.கனகராயன் குளம்.ம.வி

## இளமையும் வறுமையும்

கொடுமையிலும் கொடுமை
இளமையில் வறுமையென்று
ஔவை அன்று கூறியது
மௌனமாயிங்கு
ஒலிக்கின்றது
துன்ப துயரங்களை
மறக்க வைப்பது
நண்பர்களின் புரிந்துணர்வு
விரலுக்கேற்ற வீக்கம் போல்
இவர்களின்
விளையாட்டுப்பொருள்
ஆசைகள் அதிகரித்துச்
சென்றால்
ஓசையின்றி
இன்னலே பெருகும்
போதிமரப் புனிதருமன்று
போதித்ததுமிதைத்தான்

க.நாகராசா
சாவகச்சேரி

## மாற்றம்

அறிவற்ற ஜடப்பொருள்
அவ்வளவு எளிதில்
மாற்றமடைவதில்லை– ஆனால்
ஆறறிவு உள்ள மனிதனோ
வெகுசீக்கிரம்
மாறிவிடுகின்றான்
அறிவியல் என்னும்
அசுர வளர்ச்சியினால்

யோ.காண்டீபன்

## நட்பு

தோளுக்கு மேல் கைபோட்டு
ஊரெல்லாம் வெட்டியாய்
சுற்றித் திரிவது நட்பல்ல...
துன்பங்கள் வரும்போது
தோள் கொடுத்தும்
கஷ்டங்கள் சூழும் போது
கைகொடுத்தும்
இறுதிவரை இணைந்து
இமையாய் எம்மைக்காக்கும்
அற்புத உறவே நட்பு...

த.மோகனரூபன்
யா. விக்டோரியா கல்லூரி

## விளையாட்டு வினை

ஒற்றுமை ஓங்கிய இவ்வகை உணர்வை
ஆளும் அதிகாரம் கொண்டவர்கள்
ஆழ நினைவில் கொண்டிடல்
பேரொளி காணும் பயணமதில்
பாமரர் வாழ்வும்
விடிவுறும் என்பது உறுதி

வீ.வினிஸ்
பண்டத்தரிப்பு

## தூய நட்பு

நாட்டு மக்கள் யாவரும்
நலமோடு வாழ்வதற்கு
தம்முள் இன மத மொழி
பேதங்களை மறந்து
தோளோடு தோள் பற்றி
சகோதர உணர்வோடு
ஒற்றுமையாய் வாழ
இச்சிறுவர் தூய நட்பு
நல்லதோர் எடுத்துக்காட்டு

துரை, தென்மட்டுவில்

## கரையேறா தோணிபோல்

வளையம் உருட்டும் தம்பிகளே!
வளையாத இரும்புக் கம்பிகளே!
கல்வியே வாழ்விற்கு
உயர்வென்ற நிலையறியாது
கரையேறாத் தோணிபோல்
உம்வாழ்வை சீரழித்து
கண்ணீரில் மிதக்கவோ
ஆசை கொள்கிறாய்

வ.ச.செல்வரசா
திருநாவலூர்

## நடை வண்டி பயணம்

தாக்கங்கள் பலவற்றால்
தகர்க்கப்பட்டு யாவுமிழந்தோம்
போக்குவரத்து வாகனங்களும்
போவதற்கு ஒன்றுமில்லை– உறவுகளை
பார்க்கவென எண்ணிலும்
பாழானது ஒன்றுமேயில்லை
நாக்குவறளும் வெயிலும்
கொளுத்தட்டுமே
நடைவண்டியிலே தேடிச்
செல்கின்றோம்


பொ.புனிதன்
வரியப்புலம்

## நட்பு

நட்பு என்னும் மூன்றெழுத்தில்
நண்பர்களால் சேர்ந்து கொண்டோம்
சில காலம் செல்ல...
பிரியும் தருவாயில்
உன்னிடத்தில் என் நட்பை
உணர்த்தும்போது என் மொழி
யாவும் மௌனமாயின
காரணம்
உயிரோடு கலந்த நம் நட்புக்கு
உணர்ச்சிகள் இல்லையாம்

எஸ்.அகல்யா
கொக்குவில்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –217



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.08.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறி 4 வருடம் நிறைவடைந்த நிலையிலும் வாழ்வாதார உதவிகள் இன்னும் வழங்கப்படவில்லை

## கரைச்சி பிரதேச மக்கள் அங்கலாய்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி 23 கிராம சேவையாளர் பிரிவில் வாழும் மக்கள் மீள்குடியேறி நான்கு வருடங்கள் கடந்தும் மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கு பொறுப்பான அதிகாரிகளால் இதுவரை முழுமையாக உதவிகளை பெற்றுக் கொடுக்க முடியவில்லை என மக்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கரைச்சி 23 கிராம சேவையாளர் பிரிவில் 450 குடும்பங்கள் தற்போது மீள்குடியேறியுள்ளனர்.

இம்மக்களின் வாழ்வாதாரமாகிய காணிப்பிணக்குகள் வீட்டுத் திட்டம், மின்சாரம் வழங்கல் என் பவற்றில் இது வரை முழுமை பெற வில்லை என அம்மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம் மக்கள் கடந்த கால யுத்த இடப்பெயர்வின் காரணமாக தமது சொத்து உடமைகள், காணி அனுமதிப்பத்திரம் மற்றும் வேறு ஆவணங்கள் என அனைத்தையும் தவற விட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றுக்காக அம்மக்கள் நான்கு வருடங்கள் போராடி வந்தாலும் எவற்றிலும் அம் மக்கள் இதுவரை காலமும் முழுமை பெறவில்லை.

அத்துடன் கிளிநொச்சி கரைச்சி 23 கிராம அலுவலர் பிரிவு 5 இல் இரத்தினபுர வீதி,நீதிமன்ற அருகாமை ஜயனார் வீதி, கச்சேரியடி , ஏ-9 வீதி, புகையிரத நிலைய வீதி கிழக்கு, நவீனபுரம், பரவிப்பாஞ்சான், கரடிப்போக்கு உட்பட்ட பகுதிகளை கொண்ட கிராமத்தில் கணவனை இழந்தோர், மனைவியை இழந்தோர், அங்கவீனர்கள், ஏதிலிகள், மன நிலை பாதிக்கப்பட்டோர் மற்றும் பெற்றோரை இழந்தோர் என பலதரப்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களும் தமது காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் இல்லாமையால் காணிக்கான எந்த வொரு உதவித் திட்டங்களையோ, தொண்டு நிறுவனங்கள் செய்யும் உதவிகளையோ பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. மின்சார வசதி, தொழில் வாய்ப்பு என்பவற்றிலும் காலதாமதம் ஏற்படுகிறது.

இதனால் தொலைந்துபோன காணி அனுமதிப்பத்திரங்களை காலதாமதங்கள் ஏற்படுத்தாது தமக்கு கிடைப்பதற்கு உதவி செய்வதுடன் வீட்டுத்திட்ட உதவிகளையும் பெற்றுத் தரும்படி பாதிக்கப்பட்ட மக்கள் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரிடம் நேரடியாக சென்று பிரச்சினைகளை முன்வைத்து மகஜர்களையும கையளித்தனர்.

இதற்கமைய பல குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதுடன் காணிப்பிணக்குகள் தொடர்பான பிரச்சினை என்பன முன்வைக்கப்பட்டு வீட்டுத்திட்ட நில அளவையும் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் தமக்கு வீட்டுத் திட்ட உதவிகள் விரைவில் கிடைக்கும் என நம்பியிருந்தனர்.

இதற்கமைய கடந்த ஆனி மாதம் இப்பகுதிக்கு சென்ற இந்தியன் வீட்டுத்திட்ட உதவி அதிகாரிகள் அம் மக்களை ஒன்று திரட்டி அவர்களது விபரங்களையும் பரிசீலித்து பதிவுகளையும் மேற்கொண்டு விட்டு சென்றனர். பின்னர் 164 குடும்பங்கள் இந்தியன் வீட்டுத்திட்டத்தை பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று பட்டியலிட்டு கரைச்சி பிரதேச செயலாளரின் ஒப்புதலுடன் கிராம அலுவலர் ஊடாக மக்கள் பார்வைக்கு ஒட்டப்பட்டது.

இதன்பின்னர் கிராம அலுவலரின் அறிவித்தலுக்கு அமைய கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி 164 இந்தியன் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு தேசிய சேமிப்பு வங்கி வீட்டுத்திட்ட உதவி பணக்கொடுப்பனவுக்காக வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்துடன் காணி தொடர்பான பத்திரங்கள் 164 வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு கிராம அலுவல ரால் வழங்கப்பட்டு மக்களும் மக்களால் பூர்த்தி செய்யப்பட்டு கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி திடீரென 164 குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டம் வழங்க முடியாது என கரைச்சி பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டது. ஏனெனில் காணிப்பிணக் குகள், காணி உ ரிமம் தொடர்பான பிணக்குகள் இருப்பதாக் காரணம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, வாழ்வாதார உதவிகள் எவையும் முழுமைப்படாது இருக்கும் எமக்கு உதவி செய்யுமாறு அக் கிராம மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனா.

அத்துடன் இந்தியன் வீட்டுத்திடட உதவி வழங்கும் நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடவை நிவர்த்தி செய்து எமக்கு உதவி செய்ய வேண்டுமென அம் மக்கள் மன்றாட்டமாக கேட்டுள்ளனர். (6-254)

# வடக்கு மாகாணத்திற்குரிய நிதியை அரசே வைத்து விளையாடுகின்றது

## முதலமைச்சர் குற்றச்சாட்டு

வடமாகாணத்துக்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட நிதி தந்துவிட்டதாக தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால் பெரும் பகுதி நிதி தரப்படவில்லை. அதனை அரசாங்கமே வைத்து விளையாடு கின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா, ஓமந்தை, நவ்வி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேச வைத்தியசாலைக்கான அடிக்கல்லினை நாட்டிய வடமாகாண முதலமைச்சர் அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணம் என்பது சிறிய பிரதேசம் இல்லை. பலவிதமான இடங்கள், தொழில்கள், சூழல்கள், மக்கள் கூட்டங்கள், இயற்கை வளங்கள் என்று பரந்து கிடக்கும் ஐந்து மாவட்டங்களின் சேர்க்கை. சில சந்தர்ப்பங்களில் 40, 50 கிலோ மீற்றருக்குள் பலவித வேற்றுமைகளை காண்கின்றோம்.

வவுனியா நகரில் இருந்து 40 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றுக்கான வைத்தியசாலைக்கே அடிக்கல் நாட்டியுள்ளோம். இந்த இடங்களில் இருந்து 1996 ஆம் ஆண்டு ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெய ர்ந்த நீங்கள், தற்போது தான் மீள் குடியேறி வருகின்றீர்கள் என அறி கின்றேன்.

காணி சம்பந்தமான பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கேள்விப்பட்டேன். தற்போது இந்த வரட்சியாலும் நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.

2009 ஆம் ஆண்டுக்கு இறுதி யுத்தத்தின் போது முன்னரங்கப் பகுதி காவலரனில் இப்பிரதேசம் அமைந்திருந்தமையால் பாரிய அழிவுகளை சந்தித்திருந்தது.

வட மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து வைத்தியசாலை அமைப்பதற்கு ரூபாய் 10 மில்லியனும் சுகாதார சேவையின் பிரித்தொதுக்கப்பட்ட கொடை நிதியில் இருந்து ரூபாய் 6 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இங்கு ஆரம்பித்த வேலைத்திட்டங்கள் போன்று மேலும் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதற்கு நிதிப்பற்றாக்குறையே பிரதான காரணமாகவுள்ளது. எமக்கு தந்துவிட்டதாக கூறும் பணத்தின் பெரும் பகுதி எமக்கு தரப்படவில்லை.

நாளாந்தம் பத்திரிகையிலும் தொலைக்காட்சியிலும் பணம் தந்துவிட்டதாக கூறுகின்றார்கள். ஆனால் அவை தரப்படவில்லை.

அதில் சுமார் ஐந்தில் இரண்டு பங்கு மாத்திரமே கிடைத்துள்ளது. மிகுதி அனைத்தையும் அரசாங்கமே வைத்து விளையாடுகிறது. விளையாடுகிறது என்று நான் ஏன் கூறுகின்றேன் என்றால் என்ன செய்கிறார்கள், எப்படி செய்கிறார்கள், எங்கே செய் கிறார்கள், யாருக்கு செய்கிறார்கள் என்பது மர்மமாகவே உள்ளது என அவர் மேலும் தெரி வித்தார். (6)

# நிபுணர்களுக்கான விடுதி திறப்பு



(குருமன்காடு)

வவுனியா பொது வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்களுக்கான புதிய விடுதி நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா பொது வைத்தியசாலை வளாகத்தில் வைத்திய நிபுணர்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி களைக் கொண்ட இக் கட்டடத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். வடமாகாண சபையால் ஒதுக்கப்பட்ட 22 மில்லியன் ரூபாய் நிதியில் இந்த மூன்று மாடி விடுதிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, ம.தியாகராஜா, வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் மற்றும் வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (6-256)

# அறிவோர் ஒன்றுகூடல்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க பூரணை நாள் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30மணிக்கு கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் மாவட்ட தமிழ்ச் சங்கத்தலைவர் ஜே.இறைபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது நெஞ்சை அள்ளும் சிலம்பு எனும் விடயம் பற்றிய கருத்துப் பரிமாறலும் மருத்துவர் ஜெயராஜாவின் நல்வாழ்வு குறிப்பும், தமிழ் அறிவும் கேள்விக்குண்டணதில்? ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

எனவே இந்நிகழ்விற்கு ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-84)




# பிரமோற்சவம்

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 18 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 20 ஆம் திகதி புதன் கிழமை திருக்கல்யாணமும் இடம் பெற்று மறுநாள் வியாழக்கிழமை ஆஞ்சநேயர் உற்சவத்துடன் நிறைவு பெறும் என ஆலயநிர்வாக சபையின் செயலாளர் மு.தியாகராஜா அறிவித்துள்ளார். (6)

# பொதுச் சந்தை கையளிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட கந்தபுரம் பொதுச் சந்தை கையளிப்பு நிகழ்வும் மீன் சந்தை திறப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் தயாபரன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொள் வதுடன் சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நாவை. குகராஜா, கரைச்சி பிரதேச சபைசெயலாளர் இ.கிருஷ் ணகுமார், கரைச்சி பிரதேச செயலக தலைப்பீட கிராம சேவையாளர் தி.க மகேந்திரன் மற்றும் கந்தபுரம் கிராம சேவையாளர் சுகந்தன் ஆகியோ ரும் கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர் (6-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் கேள்வி
களை அனுப்புங்கள்
ஆசிரியர்
வியாசர் பதில்கள்
இல. 3.2 ஆம்
ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

## எதிர்காலத்தில் மணமகன் மணமகளை தேர்ந் தெடுப்பது எப்படி?

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

**அன்பின் வியாசரே!**

**எதிர்காலத்தில் மணமகன் மணமகளை தேர்ந் தெடுப்பது எப்படி?**

தந்தை மகனிற்கு கூறுகின்றார்.

1980 ஆம் ஆண்டு-உனக்கு இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறோம்.

1985 ஆம் ஆண்டு-இந்தப் பெண்ணை திருமணம் செய்கிறாயா?

1990 ஆம் ஆண்டு- நீயாரையோ காதல் செய்கிறாயாம். அந்தப் பெண் எங்கள் குலமாய் இருக்க வேண்டும்.

1995 ஆம் ஆண்டு- நீ காதல் செய்கிறாயாம். பெண் எங்கள் ஊராகவாவது இருக்க வேண்டும்.

2000 ஆம் ஆண்டு- நீ திருமணம் செய்யப் போகும் பெண் எங்கள் இனமாகவாவது இருந்தால் நல்லது.

2005 ஆம் ஆண்டு- உன் மனைவி எங்கள் நாட்டுப் பெண்ணாக இருந்தால் நல்லது.

2014 ஆம் ஆண்டு- நீ திருமணம் செய்வது ஒரு பெண்ணாக இருந்தால் போதும்.

என்.சுரேஷ், யாழ்ப்பாணம்.

**அன்பின் வியாசரே!**

**தமிழனுக்கு அடிப்படை உரிமை வேண்டுமா அல்லது காப்பெற் வீதி வேண்டுமா?**

காப்பெற் வீதிகளைப் போல் சுயநிர்ணய உரிமைகளை அள்ளித்தர ஆட்சியாளர்களுக்கு மனமில்லையே!

இ.தரன், சுழிபுரம் மத்தி.

**Hi வியாசகர் அண்ணா?**

**இதிகாசம் உண்மை என்றால் முதலில் விமானத்தை கண்டு பிடித்தது இராவணனா? இல்லை ரைட் சகோதரர்கள் தானா?**

சைவ சமயத்தில் கூறப்படும் அத்தனை விடயங்களும் பிற்காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களாகின. உதாரணமாக புஸ்பக விமானம், கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, ஏவப்படும் கணையினை வானிலேயே செயலிழக்கச் செய்யும்முறை, இப்படி அனைத்திற்கும் மூலமாய் நிற்பது நம் இந்து சமயம் என்பதில் ஐயமில்லை.



அழுது கொண்டு சாப்பிடும் பழக்கததை நிறுத்த ஒரு வழி கூறுங்கள் பிளீஸ்?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

**அன்பின் வியாசரே!**

**தாயின் பாசம், மனைவியின் நேசம் இதில் நாம் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?**

தாய் கருவில் இடம் தந்தவள். மனைவி மனதில் உன்னையும் கருவில் உயிரையும் சுமப்பவள். தாய், மனைவி என்பதற்கப்பால் பெண் அன்பின் தியாகத்தின் அடையாளம்

"தாயருகே சேயாகி தலைவனிடம் பாயாகி சேயருகே தாயாகும் பெண்ணே..."

சி.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்

**Hi வியாசகர் அண்ணா?**

**நான் இறைச்சியோ மீனோ சாப்பிடும் போது அழுதுகிட்டே சாப்பிடுவேன். காரணம் எங்களுக்காக அவை தங்கள் இன்னுயிரை தியாகம் செய்கிறது. அழுது கொண்டு சாப்பிடும் பழக்கத்தை நிறுத்த ஒரு வழி கூறுங்கள் பிளீஸ்?**

மனிதனை உண்டு வாழும் டைனோசகர்கள் தானாம் இனி இந்த உலகத்தை ஆட்சி செய்யப் போகிறது. ஒரு நாளைக்கு ஒரு டைனோசருக்கு 100 மனிதர் உணவாக வேண்டும் எப்படி வசதி?

கிருஷா, வரணி.

**அன்பின் வியாசர் அண்ணா?**

**காதலித்து விட்டு பின் ஏதும் சாட்டுச் சொல்லி கைவிடும் ஆண்களை நம்பலாமா?**

காதலிக்கும் போதே இப்படியென்றால், கல்யாணத்தின் பின் எப்படியிருக்கும். முதுகெலும்பில்லாதவர்களை நம்புவதிலும் கன்னியாக இருப்பது சிறந்தது.

சி.சுகிர்தமலர், உரும்பிராய்.

**அன்பின் வியாசர் அவர்களே!**

**இயற்கை ஏன் நீதியை சோதிக்கிறது?**

சோதிப்பதுதானே இயற்கையின் நியதி.

Pizza Italian







Lux Francisco Varano

HOTEL LUX ETOILES
34, Chetty St. lane, Nallur, Jaffna.
☎ 021 222 3966

2nd Branch
Cargills Food City Hospital Rd, Jaffna.

3rd Branch
Front of Cargills K.K.S. Rd, Chunnakam.

4th Branch
Nallur (Pure Vegetarian)

5th Branch
Next to Cargills Chavakachcheri Opening on September

6th Branch
Near the Ranjanass Ceramic, Palaly Road, Jaffna. (Soon Opening)

7th Branch
Next to Cargills Nelliyadi. (Soon Opening)

சைவம் மட்டுமே.
Pure Veg.

விசேட அறிவித்தல்

நமது வாடிக்கையாளர்களுக்கு நல்லூர் முருகன் சந்நிதான முன்னிலையில் சைவம் மட்டுமே உள்ளடக்கிய **இத்தாலியன் பீசா**, வெளிநாட்டு உள்நாட்டு சைவ உணவுகளை நமது இந்துக் கலாசார முறைப்படி ஆடையணிந்து அறிமுகப்படுத்துவதையும், திருவிழாக் காலத்தில் விசேட சேவை வழங்கக் காத்திருப்பதோடு இன்று **10.08.2014** (மஞ்சத் திருவிழா) திறந்து வைக்கப்படும் என்பதை நமது வாடிக்கையாளர்களுக்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.


(சி-8157)



It's a plessure to inform that We are going to open ten Branches before end of 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக் ஒபாமாவுடனான சந்திப்பை ஆவலுடன் எதிர்பார்க்கும் மோடி



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராணுவ அமைச்சர் சக் ஹேகல்பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசியுள்ளார்.

இருதரப்பு விவகாரங்களை பொறுத்தவரை, தனது தலைமையிலான புதிய அரசுடன், அமெரிக்கா மேற்கொண்டு வரும் மேல் மட்ட உறவுக்கு மோடி வரவேற்பு தெரிவித்தார்.

அடுத்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடனான சந்திப்பை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக மோடி குறிப்பிட்டார்.

இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் என்னென்ன செய்யலாம் என்பதற்காக இல்லாமல், உலக அளவில் அமைதி, ஸ்திரத்தன்மை, வழமை நிலவ இரு நாடுகளும் எப்படி கூட்டு சேரலாம் என்று சிந்திப்பதற்காகத்தான் அமெரிக்க பயணத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார். இராணுவ உறவை மேம்படுத்துவதன் அவசியத்தையும் குறிப்பிட்டார்.

பின்னர், இருவரும் ஈராக் உள்நாட்டு போர் குறித்து விவாதித்தனர். ஈராக்கில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ள திட்டங்கள் பற்றி மோடியிடம் சக் ஹேகல் விளக்கிக் கூறினார்.

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தினரை பாதுகாக்க விமான தாக்குதல் நடத்துவது பற்றியும், ஈராக்கில் மலை உச்சியில் சிக்கித் தவிக்கும் ஆயிரக் கணக்கான சிறுபான்மையினருக்கு ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள், தண்ணீர் போத்தல்கள் போடுவது பற்றியும் அவர் எடுத்துக் கூறினார்.

ஆப்கானிஸ்தான் நிலவரம் பற்றியும் இருவரும் விவாதித்தனர்.

அங்கு விரைவாக தேர்தல் நடத்தி முடித்தது பற்றியும், ஆட்சி மாற்றம் சுமுகமாக நடந்தது பற்றியும் நரேந்திர மோடி திருப்தி தெரிவித்தார். (6)




# பூலான் தேவி வழக்கு

## ராணா சிங் குற்றவாளி; 11 பேர் விடுதலை

சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரியாக இருந்து அரசியல்வாதியாக மாறிய பூலான் தேவி கொலை வழக்கில் முக்கிய குற்றவாளி ஷேர் சிங் ராணா குற்றவாளி என்றும், குற்றம்சாட்டப்பட்ட ஏனைய 11 பேரும் விடுதலை செய்யப்படுவதாகவும் நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

கொள்ளைக்காரியாக இருந்து பண்டிட் குயின் என பிரபலமாக அறியப்பட்ட பூலான் தேவி, சிறையில் இருந்து விடுதலை ஆனதும் சமாஜ்வாதி கட்சியில் சேர்ந்து, லோக்சபா தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.யானார்.

அவருக்கு டில்லியில் லோக்சபாவிற்கு அருகே உள்ள அசோகா ரோட்டில் 44 ஆம் எண் வீடு ஒதுக்கப்பட்டு இருந்தது. நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறும் காலங்களில் பூலான்தேவி அந்த வீட்டில் தங்கி இருந்து, சபைக்கு சென்று வருவது வழக்கம். 2001 ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வந்தது.

எனவே, பூலான்தேவி டில்லி வந்து நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். 25-7-2001 அன்று நாடாளுமன்றக் கூட்டத்துக்கு சென்ற பூலான்தேவி பகல் 1:30 மணி அளவில் மதிய சாப்பாட்டிற்காக காரில் வீடு திரும்பினார். அவருடன் பாதுகாவலர் பல்வீந்தர்சிங் சென்றார். வீட்டு முன் கார் நின்றதும் பூலான்தேவி இறங்கினார். கேட்டை திறப்பதற்காக பல்வீந்தர்சிங் முன்னால் சென்றார். அப்போது, திடீரென்று முகமூடி அணிந்த 3 மர்ம மனிதர்கள் பூலான்தேவியை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதை பார்த்ததும் பல்வீந்தர்சிங், மர்ம மனிதர்களை நோக்கி திருப்பி சுட்டார்.

ஆனால், அவரையும் அந்த மர்ம மனிதர்கள் சுட்டு வீழ்த்திவிட்டு தப்பி ஓடிவிட்டனர். துப்பாக்கியால் சுடும் சத்தத்தைக் கேட்டு, வீட்டிற்குள் இருந்த வேலைக்காரர்கள் ஓடிவந்தனர். இரத்த வெள்ளத்தில் கிடந்த பூலான் தேவியையும், பாதுகாவலர் பல்வீந்தர்சிங்கையும் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

ஆனால், வழியிலேயே பூலான்தேவியின் உயிர் பிரிந்து விட்டது. பழிக்கு பழி வாங்கும் விதமாக நடந்த இந்த கொலை குறித்து டில்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணை முடிவடைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில், முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்ட ஷேர் சிங் ராணாவை குற்றவாளி என்றும், ஏனைய 11 பேரும் விடுதலை செய்யப்படுவதாகவும் நீதிபதிகள் அறிவித்தனர். (6)

# மரண அறிவித்தல்



## திருமதி.கமலராணி விமலதாசன்

இல.29 ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கமலராணி விமலதாசன் 09.08.2014 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் இராசக்கண்ணு தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் கெதீஸ்வரி, கனகேஸ்வரி பூபாலசிங்கம்,இராசேஸ்வரி,குணபாலசிங்கம்,ஜெயராணி, செல்வராணி, ஜெகதீஸ்வரன் (மோகன்), தயாநிதி(முகுந்தன்), கண்ணதாசன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலதாசனின் (யாழ். மாவட்டதுடுப்பாட்டச் சங்க செயலாளர்) அன்புமனைவியும் சுரேஸ்குமார்,ரேணுகா,ரஜிவ்குமார் (நவீல்ட் பாடசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கண்ணதாசனின் அன்பு மாமியாரும் ரிஷியின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.08.2014 இன்று 11 மணிக்கு கொட்டடி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.29,ஆஸ்பத்திரிவீதி,**
**கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**[illegible]**

7255

# மரண அறிவித்தல்



## திரு.வைரமுத்து அப்புத்துரை

(முன்னாள் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளை மேற்பார்வையாளர், களஞ்சிய காப்பாளர்)

**வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வைரமுத்து அப்புத்துரை அவர்கள் 08.08.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலமானார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

**நெடுங்கண்ணி**
**வல்வெட்டி**
**TP 0212263981**

**தகவல்**
**குடும்பத்தினர்**

C-8150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் சமய உணர்வு கொண்டிருக்க வேண்டும் என்றால் எண்ணம், பேச்சு, செயல் அனைத்திலும் தூய்மை மிகமிகத் தேவையாகும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஒரு குற்றச் செயலுக்கு நியாயம் தேடாதீர்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் நடந்து கொண்டிருக்கின்ற வேளையில் அமைச்சர் மேர்வின் சில்வா பாதணிகளுடன் ஆலய முன்றலுக்குச் சென்றது தொடர்பில் விமர்சனங்கள் எழுந்தமை தெரிந்ததே.

பாதணிகளுடன் செல்லக் கூடாது என்பது பற்றி அமைச்சர் மேர்வின் சில்வா அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுமாயின் அதனை ஏற்றுக் கொள்வது நியாயமானதே.

இன்னொரு மதம் சார்ந்த-மொழி சார்ந்த ஒருவர் இந்த விடயத்தை அறியாதிருந்திருக்கலாம். எனவே அதனை அறிகின்றபோது அதனை நிவர்த்திப்பது மனிதப் பண்பு. இவை ஒருபுறம் இருக்க மேர்வின் சில்வா பாதணிகளுடன் நல்லூர் கந்தன் ஆலய முன்றலுக்குச் சென்றது தொடர்பில் கருத்து வெளியிட்ட யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்,

அமைச்சர்மேர்வின்சில்வாபாதணியுடன்ஆலய முன்றலுக்குச் செல்வதைக் கண்காணித்த ஊடகவியலாளர்கள் குட்டைப்பாவாடை அணிந்து செல்கின்றவர்களை புகைப்படம் எடுத்து பிரசுரிக்காதது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இவ்வாறானதொரு பதிலை அளித்திருந்தமை உண்மையில் வருந்தத்தக்கது.

அமைச்சர் மேர்வின் சில்வா பாதணிகள் அணிந்து நல்லூருக்குச் சென்றிருந்தால் அது தொடர்பில் விளக்கங்கள் கொடுக்க வேண்டுமே தவிர, இன்னொருவரின் தவறான செயற்பாட்டை சுட்டிக்காட்டி அதனை ஏன் பிரசுரிக்கவில்லை என்று கேட்பதானது குதர்க்கமானதே அன்றி, இத்தகைய கருத்துக்கள் ஒரு போதும் நியாயங்களை-உண்மைகளை நிலை நிறுத்தமாட்டாது.

மாறாக ஏதோ ஒரு வகையில் எதிர்வாதம் புரிவதை மட்டுமே இவை நோக்காகக் கொண்டிருக்கும்.

குட்டைப் பாவாடை அணிந்து செல்கின்றவர்கள் யார் என்பதை பொலிஸ் அத்தியட்சகர் தெளிவுபடுத்தாமல் விட்டிருந்தாலும் குட்டைப்பாவாடை அணிகின்ற கலாசாரம் யாரிடம் அதிகம் உள்ளது என்பதை பொலிஸ் அத்தியட்சகர் நிச்சயமாக அறிந்திருப்பார்.

எனவே, குட்டையான பாவாடை அணிந்தவர்களைப் புகைப்படம் எடுத்து பத்திரிகைகளில் பிரசுரித்தால் சில வேளைகளில் இந்த நாட்டில் பெரியதொரு கலகமே ஏற்பட்டிருக்கும்.

எனவே, ஊடகவியலாளர்கள் பெருந்தன்மையோடு நடந்துள்ளார்கள் என்று நினைப்பதே நல்லது.

இது தவிர யாழ். பொலிஸ் அத்தியட்சகரின் கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கருத்து வெளியிட்டால்,

அட! நாங்கள் அமைச்சர் மேர்வின் சில்வா பாதணி அணிந்திருப்பதை கவனிக்க, பொலிஸார் குட்டையான பாவாடை அணிந்தவர்களையே பார்த்து நின்றுள்ளனர் என்றும் பதில் வாதம் செய்யலாம்.

ஆனால், இவை எல்லாம் நாகரிகமானவை அல்ல. நீங்கள் கூட குச்சொழுங்கையில் தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் செல்கின்றவர் மீது தண்டம் விதிக்கின்றீர்கள். அதற்காக அந்த நபர்,

வீதி முழுவதும் விபத்துக்கள், உயிரிழப்புகள் நடக்கின்றன. அதனைக் கண்டு கொள்ளாத நீங்கள், பாண் வாங்குவதற்காக பக்கத்தில் இருக்கும் கடைக்குச் சென்ற என் மீது தண்டம் விதிக்கிறீர்களே! இது நியாயமா? என்று உங்களிடம் கேட்டால், கேட்டவனின் நிலை என்னவாக இருக்கும்?

ஆகவே, ஒருபோதும் ஒரு குற்றத்திற்காக இன்னொன்றைக் குற்றமாகக் காட்டாதீர்கள். அதிலும் இதனைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளாக இருக்கக் கூடிய நீங்கள் நிச்சயமாக இதனைத் செய்யக் கூடாது என்பது நம் கருத்து.

# முகாரி பாடும் முகங்கள் கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வல்வை மு.ஆ.சுமனின் முகாரி பாடும் முகங்கள் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு யா/வல்வை அ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் தலைவர் ச.விஸ்வரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பண்டிதர் பொன்.சுகந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் முதற் பிரதியை எழுத்தாளர் வல்வைந. அனந்தராஜ் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

அத்துடன் ஒரு பிரதி 150 ரூபா எனவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கலை, கலாசார இலக்கிய மன்ற ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# கலைவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு மலரும் மொட்டுக்கள் பாடசாலை, சங்கானை வண்ணத்துப் பூச்சி பாலர் பாடசாலை ஆகியவற்றின் ஆங்கில , தமிழ் கலை விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரான்பற்று அருள் அமுதீஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரி லசார், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன நிபுணத்துவ ஆலோசகர் என். நாகராஜ், கலைமாமணி கே. தெய்வேந்திரம் மற்றும் பண்டத்தரிப்பு ஜே/146 கிராம சேவையாளர் பி.சுஜீவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆகவே இப்பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6)

# கலை-அழகியற் பெறுமானமும் ஒழுக்க பெறுமானமும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் பட்டப்படிப்பு வட்டம் கலை-அழகியற் பெறுமானமும் ஒழுக்கப் பெறுமானமும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன் தொடக்கவுரையை தாயகம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் க.தணிகாசலமும் கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பா.அகிலனும் வழங்கவுள்ளனர்.

இக்கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

எனவே கலை, இலக்கிய, சமூக, விஞ்ஞான, அறிவியல் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (6)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**10.08.2014 இற்கான வினா**

ஆலயம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் அதன் பணிகள் யாவை?

**09.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**

**வெற்றி அடைவதற்கான இரகசியம் யாது?**

வெற்றிபெறவேண்டுமெனில் எங்கள் செயல்கள் அனைத்தும் இலக்கை நோக்கியதாக அமைய வேண்டும். இதற்கு எங்கள் எண்ணங்கள் அனைத்தும் இலக்கை நோக்கியதான இருக்கவேண்டும் (மன ஒருமைப்பாடு). எண்ணங்கள் இலக்கினை நோக்கியதாக இருப்பதற்கு ஆலய வழிபாடு அவசியம்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# “நம்பிரச்சினைகள் நடுவிலும் கடவுளை சந்திக்க நம்பிக்கையுடன் காலடி எடுத்துவைப்போம்”

இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு, கடல்மீது நடப்பதையும் அவரது சீடரான பேதுரு கடல்மீது நடக்க முனைந்து பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி மூழ்க ஆரம்பிக்கும் போது அவர் “ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்” என்று கத்திய துன்ப வேளையில் இயேசு கையை நீட்டி தூக்கி பேதுருவை காப்பாற்றுவதையும் பார்க்கிறோம்.

இந்தவேளையில் முன்பு ஒரு முறை வாசித்த ஒரு கதையை கட்டாயம் கூறித்தான் ஆகவேண்டும்: “மனிதன் ஒருவன் தன் வாழ்க்கையில் தான் கடந்து வந்த பாதையை, பயணத்தைத் திருப்பிப்பார்க்கிறான். பயணத்தில் கடவுள் தன்னோடு நடந்து வந்ததற்கு சான்றாக பாதை முழுவதும இரு ஜோடி காலடித் தடங்கள் பதிந்திருந்தன. அவனுக்கு மிக்க மகிழ்ச்சி. ஒரு

## பரமபிதா காட்டிய பாதை

சில நேரங்களில் அந்தப் பாதையில் ஒரு ஜோடி காலடித்தடங்களே இருந்ததைப் பார்க்கிறான். நினைவுபடுத்தி பார்த்த போது, அந்த நேரங்களெல்லாம் அவன் அதிக துன்பத்தில், போராட்டத்தில் கஷ்டப்பட்ட நேரங்கள் என்று கண்டுபிடிக்கிறான். உடனே கடவுளிடம்,துன்ப நேரத்தில் என்னைத் தனியே விட்டுவிட்டு போய்விட்டீர்களே. இது உங்களுக்கே நியாயமா?” என்று முறையிடுகிறான். கடவுள் பொறுமையாக அம்மனிதனுக்குப் பதில் சொன்னார்: “மகனே, பெரும் அலைகளாய் உன்வாழ்வில் துன்பங்கள் வந்தபோது ஒருஜோடி காலடித்தடங்களே இருப்பதைப் பார்த்துவிட்டு அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டாய். அந்த நேரத்தில் உன்னைவிட்டு நான் எங்கும் போகவில்லை. உன்னைத் தூக்கிக் கொண்டு நானே நடந்தேன் என்றார் கடவுள்.”

தண்ணீரில் நடப்பதே ஒரு சாதனை. அதுவும் புயல், அலை எனச் சுற்றிலும் பயமுறுத்தும் சூழலில் இயேசு பேதுருவைத் தண்ணீரில் நடக்கச் சொன்னது பெரியதொரு சவால். இதில் நம் கவனத்தை ஈர்ப்பது என்னவென்றால், இயேசு பேதுருவுக்கு அந்தச் சவாலை அளிக்கும் முன்பு காற்றையும், கடலையும் அமைதிப்படுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை என்பதுதான். வாழ்க்கையில் வீசும் புயல்கள் எல்லாம் ஓய்ந்து பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்த பிறகுதான் இறைவனைச் சந்திக்க முதல அடி எடுத்து வைப்போம் என்று நினைக்கும் நம் எண்ணங்கள் தவறு. மாறாக அந்தப் புயலின் நடுவிலும் இறைவன் கூடவேயிருந்து காப்பாற்றுகிறார் என துணிந்து சென்று அவரைச் சந்திக்கலாம் என்பதையே இயேசு இங்கு நமக்கு சொல்லித் தருகிறார்.

பிரச்சினைகள் இருக்கத்தான் செய் யும். அலையும் புயலும் அலைக்கழித்துக் கொண்டு தான் இருக்கும். அஞ்சாதீர்கள், நம்பிக்கையுடன் துணிந்து வாருங்கள் துயர நேரங்களில் உன்னை தூக்கிச் சுமப்பேன். தம்மை நோக்கிக் கூக்குரல் எழுப்பிய பேதுருவை இயேசு “உடனே தம் கையை நீட்டிப் தூக்கி காக்கின்றார். புயலின் நடுவில், கடலின் நடுவில் கடவுள் நமமோடு இருக்கிறார். துயரநேரம் துணையாயிருந்து நம்மையும் கரம்நீட்டி தூக்கி காப்பார்.

பேதுருவுக்கு இயேசுவைப்போல கடலின்மேல் நடக்கவேண்டும் என்று ஆசை வந்ததுபோல் இன்று எமக்கு கடவுளைப் போல் நாமும் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். இயேசுவும் இதைத் தவறு என்று சொல்லவில்லை. பேதுருவை அனுமதித்தது போல் எமது ஆசைகளை அனுமதிக்கிறார். இன்று எமது ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புக்கள் எல்லாவற்றையும் இறைவன் அனுமதிக்கிறார். ஆனால் பேதுரு கடலில் மூழ்கியதுபோல் மூழ்கிவிடக்




கூடாது என்றே அவர் விரும்புகின்றார். பேதுருவுடைய நம்பிக்கையின்மை, பயம், ஆணவம், தெய்வீகவலுவின்மை, இவையே அவர் மூழ்குவதற்கு காரணமாயிருந்தன. ஆசைப்படுவதில் தவறில்லை. ஆண்டவனைப் போன்ற ஆற்றல் இருக்கிறதா? தெய்வீக ஆற்றலால், இறை உணர்வுகளால் நாம் நிரம்பியிருக்கின்றோமா? என்ற வினாவிற்கு விடை காண வேண்டும். இயேசு இறைமகனாய் இருந்தும், அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒருமலையின் மேல ஏறினார்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார். தெயவீக ஆற்றலால் தன்னை நிறைத்துக் கொண்டார். கடல் மீது நடக்குமுன் கடவுள் அருளால் நிரப்பிக் கொண்டார். தந்தையோடு தனியே உறவாடச் சென்ற இயேசு அங்கேயே தங்கி விடவில்லை. காற்றோடு, கடலோடு போராடிய தன் சீடர்களைத் தேடி வந்தார். அதுவும், கடல் மீது நடந்து வந்தார். இந தெய்வீக ஆற்றல் இல்லாத ஆசை, ஆபத்தில் முடிவது எதிர்பார்க்கக் கூடியதே. அருளால் ஆண்டவனோடு இணைத்து ஆசைபடுவோம், கடலிலும் நடக்கலாம், மலையையும் தாண்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 சதங்களுடன் சாதனையில் சங்கா



பாகிஸ்தான் அணிக்கு எதிராக அதிக சதங்களை பெற்ற வீரராக குமார் சங்கக்கார தன்னை பதிவு செய்து புதிய சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இவ் டெஸ்ட் போட்டியில் குமார் சங்கக்கார சதம் கடந்திருந்தார். இது அவர் பாகிஸ்தான் அணிக்கு எதிராக பெற்ற 10 அவது சதமாகும்.

இதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு எதிராக அதிக சதங்களை பெற்ற வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதுவரையில் இவர் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 37 சதங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# அமரர் சுப்பிரமணியம் தற்பரன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

## அச்சுவேலி கதிரொளி சம்பியன்

அமரர் சுப்பிரமணியம் தற்பரன் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

அதில் கதிரொளி விளையாட்டுக் கழகம் 31 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற அச்சுவேலி கதிரொலி விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப் பெடுத்தாடியது.

இதன்படி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது.

அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் மதுஷாந் 67, துஷி 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் சார்பில் விதுஷன் மற்றும் திவா தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக அணி சார்பில் விதுஷன் 49, டிலக்ஷன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் டவாத் 3 இலக்குகளையும் சாள்ஸ் மற்றும் ஜனகன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன்படி இப் போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அமரர் சுப்பிரமணியம் தற்பரனின் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் சம்பியனாகியது.

இதில் தொடர்நாயகன் விருதையும் அதிகூடிய ஓட்டத்தை பெற்றவருக்கான விருதையும் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக வீரன் விதுசன் பெற்றுக் கொண்டார். இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாக கதிரொளி விளையாட்டுக் கழக வீரன் மதுசன் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; திக்கம் இளைஞர் நவஜீவன்ஸ் வெற்றி

பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி றெஜின்போ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 6 ஆவது நிமிடத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் துள்ளு மிகவும் அருமையான கோல் ஒன்றைப் போட்டார். இதனை அடுத்து தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஞானமுருகன் அணியினர் கோல் போடுவதற்கு கடுமையாகப் போராடினர். ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரன் லஸ்ரின் கோல் ஒன்றைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையைச் சமப்படுத்த 1:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடித்தபோதும் திக்கம் இளைஞர் அணிவீரர் துள்ளு மீண்டும் ஒரு கோலைப் போட்டு அசத்தினார். தொடர்ந்து இரு அணி வீரர்களும் கோல் எதனையும் போடாத நிலையில் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றுள்ளனர்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் நவஜீவன்ஸ் அணி 6:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் நவஜீவன்ஸ் அணி சார்பாக பசீலன் 2 கோல்களையும் உஷாணந் 2 கோல்களையும் சுரேஸ், பொபிநாதன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர். கரவைச் சுடர் சார்பாக இராசன், விஜி ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர். (கு)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

மாதகல் நாவலர் புயல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று இடம்பெறவுள்ளது.

இச் சுற்றுத்தொடரானது எதிர்வரும் 16.17.23.24 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது. போட்டிகள் அணிக்கு 7 பேர் 6 ஓவர்கள் கொண்டவையாக இடம்பெறவுள்ளன.

இச் சுற்றுத்தொடரில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து இன்று 10 ஆம் திகதிக்கு முன்னர் கழகத்தில் ஒப்படைக்கவும்.

விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மேலதிக தகவல்களுக்கும் 077 914 5482 என்னும் இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-23)

# ரோஜர்ஸ் கோப்பையின் காலிறுதியில் கால் பதித்தார் ரோஜர் பெடரர்



ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் விளையாட நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) தகுதி பெற்றார்.

மூன்றாவது சுற்றில் குரோஷியாவின் மரின் சிலிச்சுடன் நேற்று மோதிய பெடரர் 7:6 (7:5), 6:7 (3:7), 6:4 என்ற செட் கணக்கில் போராடி வென்று கால் இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 3 ஆவது சுற்று போட்டியில் பிரான்ஸ் வீரர் ஜோ வில்பிரைடு சோங்காவுடன் மோதிய நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் (செர்பியா) 2:6, 2:6 என்ற நேர் செட்களில் பரிதாபமாக தோற்று வெளியேறினார்.

சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ் லாஸ் வாவ்ரின்காவும் 6:7 (8:10), 5:7 என்ற நேர் செட்களில் தென் ஆபிரிக்காவின் கெவின் ஆண்டர்சனிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

முன்னணி வீரர்கள் ஆண்டி மர்ரே (இங்கிலாந்து), கிரிகோர் திமித்ரோவ் (பல்கேரியா), டேவிட் பெர்ரர், பெலிசியானோ லோபஸ் (ஸ்பெயின்) ஆகியோரும் கால் இறுதிக்கு முன்னேறி உள்ளனர். (கு)

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம் யாழில் ஆரம்பம்



இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை பல்கலைக்கழக அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் 1950 ஆண்டு முதல் நடைபெற்று வருகின்ற போதிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நாற்பதாவது ஆண்டு நிறைவில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இம்முறை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உதைபந்தாட்டப் போட்டிகள் சம்பிரதாயபூர்வமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் எ.சூசைஆனந்தன் கலந்துகொண்டு பல்கலைக் கழக கொடியை ஏற்றி வைத்தார்.

அத்துடன் வீரர்களுக்கு பேராசிரியர் சூசை ஆனந்தன் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் கே.கணேசநாதன், விரிவுரையாளர் இளம்பிறையன் ஆகியோர் வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற போட்டிகளில் பங்குபற்றி வீரர்களுக்கு யாழ்ப்பாணக் கல்லூரி உடற்கல்விப் பணிப்பாளர் பி.எல்.மோகனகுமார் மற்றும் பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் டானியல் மதியழகன் ஆகியோர் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்கப்பட்ட மாண...

மாணவன் சந்திரகுமார் சுதர்சனை பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினர் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது அறையில் இரவு நெடுநேரம் படித்துவிட்டு, நித்திரையின் பின்னர் அதிகாலை 3 மணியளவில்எழுந்து கழிப்பறைக்குச் சென்றபோது, அடையாளம தெரியாமல் கறுப்புத் துணியால் முகததை மூடிக் கட்டியிருந்த இரண்டு நபர்களினால் சந்திரகுமார் சுதர்சன் கடுமையாகத தாக்கப் பட்டிருந்தார்.

கைகள், வாய் என்பன கட்டப்பட்ட நிலையில் மாணவர் விடுதியருகில் உள்ள பற்றைக்காட்டில் மயங்கிய நிலையில் இவர் வீசப்பட்டிருந்தார்.

பின்னர் மயக்கம் தெளிந்து எழுந்து விடுதியைச் சென்றடைந்த இவரை சக மாணவர்கள் பலாங்கொடை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருநதனர்.

பின்னர் அவர் அங்கிருந்து இரத்தினபுரி வைத்திய சாலைக்கு மேல் சிகிச் சைக்காக அனுப்பபட்டிருந்தார். அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு நேற்று சனிக்கிழமை அவர்வீடு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதே, அவரைபயங்கரவாதப் புலனாய்வு பரிவினர் விசாரணைக் காக கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இந்தத் தகவல் கிளிநொச்சி மாவட்டம் பளையில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாக முகமாலையில் உள்ள அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்கள் தங்கியுள்ள விடுதியின் கழிப்பறையொன்றில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் அங்கு கல்வி கற்கக் கூடாது. உடனடியாக அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று உயிரச்சுறுத்தல் விடுத்து, கொச்சைத் தமிழில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் கடந்த மாதம் 20 ஆம் திகதி ஒட்டப்பட்டிருந்தன.

இரண்டாவது தடவையாக அத்தகைய சுவரொட்டிகள் இரவு நேரத்தில் ஒட்டப்பட்ட போது, அந்தக் கழிப்பறைக்குச் சென்ற போதே இந்த மாணவன் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார்.

**கைதான இன்னொரு மாணவனுக்கு பிணை**

இந்தச் சம்பவத்தை அடுத்து, இதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவனாகிய யோகநாதன் நிரோஜன் கடந்த 6 ஆம் திகதி பரீட்சை எழுதிக் கொண்டிருந்த போது பரீட்சை மண்டபத்தில் இருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால வசாரணை செய்யபட்ட இந்த மாணவன், நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அவரது தந்தை யாரிடம் சரீரப் பிணையில் வீடு செல்வதற்கு அனுமதிக் கப்பட்டிருந்தார்.

இந்தமாணவனின் கைத் தொலை பேசியில் பயங்கரவாதம் தொடர்பான சில தடயங்கள்இருந்தமையினால் அவரை விசாரணைக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்த பொலிஸார், கைத் தொலைபேசி தொடர்பான விசாரணைகள் இன்னும் முடியவில்லை என்று கூறியதையடுத்து நீதவான் இந்த வழக்கை வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (செ-11)


### வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் கரிகணன் பிறின்ரேர்ஸ் முன்பாக உள்ள ஒழுங்கையில் கின்னர் கொலிச் லேனில் புதிதாக கட்டப்பட்ட வீடு கிழமை, மாத அடிப்படையில்தளபாடங்களுடன்வாடகைக்கு உண்டு. நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.

(7265) 0777035457

### வீடு வாடகைக்கு

இல. 02, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.

திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு :- 0777200839 0750498617, 0213209271 (7259)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 226-xxxx இலக்கம் கொண்ட Isuzu வகை 01 கியூப் டிப்பர் வாகனம் விற் பனைக்கு உண்டு.

தொடர்பு :

T.P :- 0773612427
0212056637

(8119)

### Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy** அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-8138)

### Vacancies for Malaysia

**1.Hotel**
i) Room boy
ii) Waiter

**2.Coconut milk Product Helpers**
1350 RM + O.T =54000/- (S.R)+ O.T
(Accommodation free + no food)

**3.Building Conruction**
i) Masons 2100 RM 84 000/-(S.R)
ii) Labours 1800 RM 72 000/-(S.R)
(No Food, Accommodation Free)

(7258)

C.No. 0776076953, 0776712197


## முக்கிய போர்க் குற்ற...

சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்குஅவர்மேலும் கருத்து வெளியிடுகையில்,

சமகாலத்தில் ஆரம பிக்கப்பட்டிருக்கும் குறித்த சர்வதேச விசாரணை குற்றவியலுடன் சம்மந்தப்பட்டதென்ற வகையில், உள்நாட்டிலிருந்து விசாரணைகளுக்கு சாட்சியம் வழங்குவது பாதுகாப்பானதல்ல. அதனை ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளரும் அறிந்திருக்கின்றார்.

அதனாலேயே பெரும் பாலான சாட்சிகளை, புலம் பெயர நாடுகளில் உள்ளவர்களிடம் பெறுவதற்கு முயற்சிக்கப் படுகின்றது. ஆனாலும் உள்நாட்டிலிருந்தும் மிக பாதுகாபபான முறையில் சாட்சியங்களை வழஙகுவதற்கு அவர்கள்பொறி முறைகளைஉருவாக்கியிருக்கின்றார்கள்.

அதற்கு மிக முக்கியமான சாட்சிகளை வைத்திருக்கும் மக்கள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருடனாவது, தொடர்பு கொள்வதன் மூலம் பாதுகாப்பான சாட்சியத்தைவழங்க முடியும்.

ஒரு குற்றத்திற்கு அதிகளவான சாட்சியங்களை வழங்குவதன் மூலம் அந்த குற்றத்தை நிரூபித்துவிட முடியாது.

ஒரு சாட்சி வழங்கினாலும் அது பெறுமதியானதாக இருக்க வேண்டும். எனவே பாலியல் வன்கொடுமைகள், சித்திரவதைகள், போர்க குற்றங்கள், ஆட் கடத் தல்கள், காணாமல போதல்கள், மோசமான இடப் பெயரவுகள், படுகொலைகள், போர் நடந்த பகுதிகளில் மக்கள் மீதான தாக்குதல்கள் போன்ற மிக முக்கியமான விடங்களில் பெறுமதியான சாட்சியங்களை வழங்குவதற்கு மக்கள் முனவரவேண்டுமஎனஅவா தெரிவித்தார். (செ-11)

## வெடி பொரு...

யுள்ளனர். இதன்போது அப்பகுதியில்வெடிபொருட்கள்வெளிக்கிளம்பியுள்ளன.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

ஆர்.பி.ஜி ஷெல்கள் - 2, மோட்டார் செல்கள் -2, கைக்குண்டு - 1 மற்றும் ரவைகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள் ளனஎன்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-250)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சின்னத்துரை



மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் மருதநகர் கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான ஆறுமுகம் சின்னத்துரை நேற்று சனிக்கிழமை (09.08.2014 என்ற காலமானார் அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், சீனிவாசகம் - தெய்வசுந்தரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தெய்வநாயகி (பவளம்) அவர்களின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவர்களான சிவகுரு, வள்ளியம்மை மற்றும் தங்கச்சிப்பிள்ளை, பார்வதி (சின்னம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மராஜா, சத்தியேஸ்வரி (ஈஸ்வரி), நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தமிழினி (பிரான்ஸ்), சுபாசினி (பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை கரைச்சி), தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலன் (பிரான்ஸ்), றெஜிஅலோசியஸ் (நிர்வாக உத்தியோகத்தர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை) ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். சுஜீவன், அபிராமி, அபிநயா, அட்சயா, அனுசியா, அபிஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.08.2014) பிற்பகல் 3.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநகர் கிளிநொச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி
மருதநகர், கிளிநொச்சி. (C-8161)

தகவல் :-
றெஜி அலோசியஸ் (மருமகன்)


### ராஜா திரையரங்கில்...




உலகப்புகழ்பெற்றநல்லூர் கந்தன்திருவிழாவைமுன்னிட்டு மகாபாரதத்தின் கர்ணனின் வரலாறு நாற்பது ஆண்டுகளுக்கு பின் மீண்டும் யாழ்.ராஜா திரையரங்கில் 15.08.2014 முதல் திரைக்கு வருகிறது. இக் காவியம் இக்கால பாடசாலை மாணவ, மாணவிகள்கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஓர் திரைக்காவியம். தமிழ் நாட்டில் 2வது தடவையாக புதிய டிஜிற்றல் வெளியீட்டில் 162 நாட்களுக்கு மேல் ஓடி வசூலில் பெரும் சாதனை படைத்த இக்காவியமான கர்ணன் எனும் படம் குறிப்பிட்ட சில திணங்கள் மட்டும் காண்பிக்கப்படும் என்பதை அறியத்தந்து ரசிகர்கள் பேராதரவு வழங்கும்படி தாய், தந்தை, மாணவ, மாணவிகள், பாடசாலை சமூகத்தினரை கேட்டுக்கொள்கிறோம். (C-8158)

Note :- பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகையில் டிக்கட்டுகள் 0212227893

உலக நடிகர் சிவாஜி ரசிகர்கள் : யாழ்.மாவட்டம்


## மரண அறிவித்தல்

### கந்தையா கந்தசாமி



முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டியை நிரந்தர வசிப்பிடமாகவும், வேலவளவு, ஏழாலை மேற்கு சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி (09.08.2014) நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் புஷ்பராணியின் அன்புக் கணவரும் காமினி, நந்தகோபன், விபூஷன் ஆகியோரின் அருமைத் தந்தை யாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.08.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயாணத்தில் பூதவுடல் தகணம் செய்யப்படும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

(7266)

வேலவளவு, ஏழாலை மேற்கு
சுன்னாகம்,

தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-8147)

SCS SHADONI COURIER SERVICE
SHADONI பொதிகள் சேவை
HANDLE WITH CARE
SHADONI COURIER SERVICE
அழையுங்கள் 021 222 8591 077 266 6429
விரைவானதும் நம்பிக்கையானதுமான சேவைக்கு.....

கணனி வல்லுநராவதற்கு
இன்றே எம்முடன் இணையுங்கள்
Basic Courses
* Hardware + Basic Networking
* Advanced Networking
Advanced Certifications
Microsoft Certifications
* MCSA : Windows Server 2012
* MCSA : Windows 8
* MCSE : Desktop Infrastructure
* MCSE : Server Infrastructure (2012)
Cisco Certifications
* CCNA
* CCNP
Linux Administration
PHP, MySQL
*** Unlimited Practical Hours
25% Discount On Full Payment
WinSYS NETWORKS
Network Security Training provider in Jaffna
(C-5152)
iCS International Academy
77,மணிக்கூட்டு கோபுர வீதி,
(பெருமாள்கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
Tel: 021 7306000 , 077 3013060

## ஜனா...

தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. பின்னர், இரண்டாவது பதவிக் காலத்தில் உள்ள ஒருவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிட முடியும் என்று அரசியலமைப்பில் 18-வது திருத்தம்கொண்டு வரப்பட்டது .

ஆயினும், ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற போது அரசியலமைப்பின் 31/2வது பிரிவில 18-வது திருத்தம் இருக்கவில்லை. எனவே, ஏற்கெனவே இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்த அவர், மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட அனைத்து நாடுகளுக்கும் 10kg இற்கு மேல் பொதிகள் அனுப்புபவர்களுக்கு விசேட விலைக்கழிவும் அதற்குக் குறைந்த நிறைகளில் அனுப்புபவர்களுக்கு விலைக்கழிவும் வழங்கப்படும்.
எதிர் வரும் 31.08.2014 வரை எமது நிறுவனத்துக்கு வருகை தரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும்
(C-8145)
FRAGILE handle with care
SHADONI COURIER SERVICE
272, K.K.S Road – Jaffna
SCS

## ஐ.நா...

காவிடினும் ஐக்கிய நாடுகளின் விசாரணை முன்னெடுக்கப்படும், இந்த விசாரணைக் குழுவானது அனுபவம் கொண்ட அதிகாரிகளுடன் ஆலோசனைக் குழுவொன்றையும் கொண்டுள்ளது.

அவர்கள் சிறப்பான செயற்பாட்டை முன்னெடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் தெரிவித்தார். (செ-11)

உலகத் தமிழர்களின் உச்ச நிறுவனம்
ரமி இசைத்தட்டின் மாபெரும் மலிவு விற்பனை
ராஜா நகரில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசாமி கந்தனின் மஹா உற்சவ திருநாளை முன்னிட்டு சுவிசில் இருந்து மூன்று இடங்களில் முகாமிட்டு நடத்தி வருகிறோம்.
இலங்கையில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் எதிர்பார்க்காத விலையில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். அனைத்தும் ஒரிஜினல் சிடிக்கள். கம்யூட்டர் பதிவுகள் அல்ல என்பதை மக்கள் அறிய வேண்டும்.
Contact: KANTHAN 0779704753
BAR DIGITAL AUDIO
RAMIY RECORDS SWISS MADE
ரமி AUDIO CD
பார் MP3
ஐங்கரன் DVD
அனைத்தும் ஒரிஜினல்
கொடியேற்றத்திலிருந்து 01.08.2014 மலிவு விற்பனை ஆரம்பம் இதனை தொடர்ந்து துர்க்கை அம்மன் (சப்பறம், தேர், தீர்த்தம்), சன்னதி முருகன் (6ம் நாளிலிருந்து தீர்த்தம் வரை), வல்லிபுரம் ஆழ்வார் (சப்பறம், தேர், தீர்த்தம்) உற்சவ நாட்களிலும் எமது மலிவு விற்பனை.
30 ரூபாயிலிருந்து விலை ஆரம்பம்
விற்பனை நடைபெறும் இடம் : கோவில் வீதி, 231 நல்லூர் யாழ்அருவி (சுவீஸ் மினரல் வாட்டர் கம்பெனி)
விற்பனை நடைபெறும் இடம் : லிங்கம், ரியோ கூல்பார் (நடுவே அமைந்துள்ளது)
(C-7220)

SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT
உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.
தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்
021 492 6003
இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்
SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில், கிழக்கு
7207

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை
விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
THIRUMURUGEN COM NET (PVT) LTD.
திருமுருகன் கொம்நெற்
(பிறைவெட்). லிமிட்டெட்
வாரத்தில் ஏழு நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.
- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள்
- CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
TCN Express
2b Nelsan Place,
Colombo - 6.
Packing & Courier
20 வருடங்களுக்கு மேல் முதன்முதலில் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)
குறிப்பு: எமது நிறுவனம் இங்கே குறிப்பிடப்பட்ட இடங்களில் மட்டுமே ... அறியத்தருகின்றோம்.
(C-7170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.